தென்றல்

ஆசிரியர்:
கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, சித்திரை 4 (16-4-'60). சனிக்கிழமை | இதழ் 44

மண முறைகள்

நீல மலையான்

மனிதனுடைய இளமைக் காலக் கனவுகள் ஒரு நாள் நனவாகின்றன. அந்த நல்ல நாளில் மிக மகிழ்ச்சியாக இருக்கிறான். அந்த நாளில்தான் தனக்குப் பிடித்த-அழகுள்ள-அறிவுள்ள பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறான்.

தன் இளம் நெஞ்சம் எண்ணிய எண்ணமெல்லாம் ஈடேறும் நாள் அந்தத் திருமண நாள்தான்.

அதிலும் சில புற நடைகளில்லாமலில்லை.

அந்த ஒரு நாளுக்காக மனிதன் எத்துணையோ இன்னல்களையும் இடர்பாடுகளையும் சமாளித்து இறுதியில் தான் விரும்பிய கன்னியின் கைப்பற்றுகிறான். அதிலே மகிழ்ச்சியடைகிறான்.

அதிலே சில முயற்சிகள் பலனற்று, புறநடை என்று விலகி விழிகளிலே நீரைச் சோரவிட்டும், மரக் கிளைகளிலே உடலைத் தொங்கவிட்டும வாழ்க்கையை முடித்துக்கொள்கிறார்கள்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளை நாம் தினம் தினம் கண்டவண்ணமாக இருக்கிறோம்.

ஆனால், ஏதும் கட்டுப்பாடு இன்றி, திருமணத்தில் தன் விருப்பப்படி-சுயேச்சையாக ஒரு இனம் வாழ்நது வருகிறது. அந்த இனம் வெளியுலகிற்குத் தெரியாமல் மலைகளின் சாரல்களிலே-குன்றுகளின் இடையினிலே, ஒதுங்கித்தனித்து வாழ்ந்து வருகிறது.

அந்த நல்ல சூழ்நிலையினைப் பெற்றவர்கள் 'தொதுவர்' என்று சொல்லப்படும் நீலகிரியின் பழங்குடி மக்களாவர்.

அவர்களின் திருமண முறையே மிக விந்தை நிறைந்தது.

தொதுவர்களின் 'மந்து'கள் (ஊர்கள்) மிகச் சிறவைகளாகும். ஒரு மந்தில் நான்கு அல்லது ஐந்து குடிசைகள்தான் இருக்கும்.

அவர்களில் பெண்களின் தொகை மிகக் குறைவு. இந்தக் குறை இருப்பது தெரிந்துதானோ என்னவோ ஒரு பெண்ணைப் பல ஆண்கள் மணந்து கொள்கிறார்கள். இப்படி ஒரு பெண் பலருக்கு வாழ்க்கைப் படுவது மூன்று வகையான திருமணங்களாகும்.

முதல் முறை: இந்த முறை மற்ற எல்லா இனத்தவர்கள் செய்வது போலவும் பிள்ளையின் பெற்றோர் பெண்ணின் பெற்றோரைச் சந்தித்துத் திருமணம் பேசுவர். பெண்ணின் பெற்றோர் ஒத்துக் கொண்டால் ஒரு நாள் குறிப்பர்.

அந்த நாளில் அவர்கள்குடிசையின் முன்னால் வழ வழப்பான உருண்டைக் கல் கிடக்கும்; அந்தக் கல்லை மாப்பிள்ளை தூக்கித் தலைக்குமேல் உயர்த்த வேண்டும். அப்படி அக்கல்லைத் தூக்கிவிட்டால் திருமணம் நடைபெறும். அவனுக்கு அது இயலாமற் போனால் அந்தப் பெண் அவனை மணந்துகொள்ள விரும்பமாட்டாள். பெண்ணின் பெற்றோர்களும் பெண் தரச் சம்மதிக்கமாட்டார்கள்.

இந்த முறை பழந் தமிழர் வாழ்க்கையில்-காடு சென்று சீறும் வேங்கையைக் கொன்று பல்லைக் கொணர்ந்து பெண்ணின் கழுத்தில் கட்டினான் என்று நாம் இன்று இலக்கிய ஏட்டிலே காணுகிறோம். ஆனால், அதுபோன்ற முறையை எங்கோ காட்டிலே நாகரிகம் என்பதே தெரியாத இனத்தவரின் வாழ்க்கையிலே காணுகிறோம்.

இரண்டாம் முறை: அடுத்த முறை, பண்டைத் தமிழர் அகப்பொருள்பற்றி படிக்கிறோமே-தலைவனும் தலைவியும் இயற்கை-ஊழ் கூட்டுழிக் கூடிக் காதலித்து இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்று களவு வாழ்க்கை நடத்திப் பின்னர் மணம் முடித்துக்கொள்வர்.

அதுபோல விழா நாட்களிலோ அல்லது பருவமடைந்த பெண், தனக்குப் பருவ வேட்கை மிகுந்த போது கண்ணாடித் துண்டு ஒன்றை எடுத்து வெயிலில் நின்று-அக்கண்ணாடியை சூரியனுக்கு நேரே பிடித்து அதில் தோன்றும் கண்ணாடிப் பிரதிபலிப்பை பக்கத்து மந்துகளுக்குள் பாய்ச்சுவாள். அந்த ஒளியைக் காணும் இளைஞன் எவனுகிலும் அக்குறிப்பை அறிந்து, ஒளி வந்த திக்கை நோக்கி வந்து அங்கு அவளைக் கண்டு காதலிப்பான்.

பிறகு இருவரும் - உடன்போக்கு நிகழ்வதுபோல்-ஒருவருக்கும் தெரியாமல் வேறு தொலைவிலுள்ள மந்திற்குச் சென்றுவிடுவார்கள். இவ்வாறு காணுமற் போன பெண்ணின் வீட்டாரும் பிள்ளையின் வீட்டாரும் இணைந்து ஒவ்வொரு மந்தாகச் சென்று தேடி இறுதியில் அவர்களைக் கண்டு பிடித்து அழைத்து வந்து திருமணம் நடத்தி வைப்பார்கள்.

மூன்றும் முறை: பூப்பெய்தாத பெண்ணையும் அவளை மணந்து கொள்ள விரும்பும் பிள்ளையையும் ஒரு குடிசையில் விட்டுவிடுவார்கள். இரண்டொரு திங்களில் அந்தப் பெண் பூப்பெய்திய பின் திருமணம் நடைபெறும். (பூப்பு அடைவதற்கான சில குறிப்புகளைக் கண்ட பெற்றோர்கள் இதைச் செய்வார்கள்.)

இந்த முறை இப்போது அவ்வளவு பரவலாகக் காணப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்து வருகிறது.

இவ்வாருகத் திருமணங்கள் நடந்து வருகின்றன. ஒரு வீட்டில் உடன்பிறந்தவர்கள் மூன்று பேர் நான்கு பேர் இருந்தாலும் மூத்தவன் ஒருவனே திருமணம் செய்து கொள்வான். அந்த ஒரு பெண் தான் சகோதரர் அனைவருக்கும் மனைவியாக இருப்பாள். அங்கு தான் அவர்கள் ஒற்றுமையின் உச்சத்தை எட்டுகிறார்கள்.

இவ்வாறு நாலைந்து பேர்களுக்குத தான் ஒருத்தியே மனைவியாக இருப்பதில் அவள் பெருமைப் பட்டுக்கொள்வாளேதவிர, வருந்தமாட்டாள்.

இத்தகைய ஒற்றுமையும், வஞ்சகமற்ற எதார்த்த வாழ்வும், பண்பாடும், பழக்க வழக்கங்களும் எங்கோ மலை இடுக்குகளில்ஒதுங்கி வாழும் அந்த முது குடியினரிடம் நிகழ்வது கண்டு யாரும் வியக்காமல் இருக்கமுடியாது.

ஆனால், நாமோ போலி நாகரிகத்தை நம்பிப் பண்பாடுகளை-பழக்க வழக்கங்களைக் கைவிட்டதுமல்லாமல் இந்த முது குடியினரை இழித்தும் பழித்தும் பேசுவதில் தயங்குவதில்லை.

இவ்வாறு, நாம் அவர்களிடம் தெரிந்துகொள்ள வேண்டியவைகள் பல. ★

ஐயம் அகற்று

பன்மொழிப்புலவர்
கா. அப்பாத்துரையார் பதில் தருகிறார்.

கா. பரமேசுவரன், காரமடை.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி... "ஊழ்வினை துறந்த சூழ்கழல் மன்னா-நின் நகர் புகுந்து ஈங்கு" எனக் கூறுகிறாளல்லவா? அதுபோல வள்ளுவனும் தன் குறளில் ஊழ்வினையை உயர்த்தியும் அடுத்தாற்போல வேறொரு குறட்பாவில் ஊழ்வினையையும் முயற்சியால் வெல்லலாம் என்று கூறுகிறார். இதிலிருந்து ஊழ்வினை என்பதொன்று உண்டா? இல்லையா? அதனை முயற்சியால் வெல்ல முடியுமா? என்பது பற்றி எங்களுக்குள் வாக்குவாதம் நடந்தது. முயற்சியால் ஊழினை வெல்ல முடியும் என்பது எங்களின் கருத்து - அதை மறுக்கிறார்கள் எதிரவர் - தங்களின் கருத்து என்ன என்பதைத் தெளிவாக கூறுங்கள்!

மேற்கோள் காட்டிய அடி (வழக்குரை காதை 59-6) திருந்திய நிலையில் வருமாறு!

"வாழ்தல்வேண்டி ஊழ்வினை
துரப்பச்
சூழ்கழல்மன்னா நின்நகர்ப்
புகுந்திங்கு
என்கால் சிலம்பு
பகர்தல்வேண்டி'

என்ற அடிகளில் 'ஊழ்' கண்ணகி கூற்றாகமட்டுமேவருகிறது. பழமைப் பிடியிலுள்ள எந்தத் தமிழ் மகனோ, தமிழ் மகளோ இன்று 'ஊழ்' என்ற சொல்லைக் குறிப்பிடுவதுபோல, அதே பொருளில், அதே சூழலில் தான் கண்ணகி அச்சொல்லை இங்கே கையாண்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

'ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூஉம்'

என்ற பதிகவுரை ஊழ்பற்றிய இந்தப் பழமைக் கருத்தை இன்னும் ஒரு படி வலியுறுத்திக் கூறுவதாகவே தெரிகிறது. பதிகத்தை இயற்றியது ஆசிரியரேதானா அல்லது மற்றொருவரா என்று துணியப் பெறாத நிலையில் கூட ஆசிரியர் கருதது இதில் வேறான தல்ல என்பதைச் சிலம்பு முழுவதிலும் அவர் ஊழ் என்ற சொல்லையும் கருத்தையும் வழங்குவதனால் அறியலாம்.

கண்ணகியளவு அல்லது கண்ணகி ஓவியத்தைப் படைத்துக் காட்டிய இளங்கோவளவு சங்க இலக்கியப் பாடல்கள் பொதுவாக ஊழை வற்புறுத்தாவிட்டாலும், ஊழ் பற்றிய சங்கப் புலவர் கருத்து முற்றிலும் மாறுபட்டதென்று நினைக்க ஏதுவில்லை. பலர் பாடிய பாடல்களில் பலதரப்பட்ட முற்போக்குப் பிற்போக்கு வேறுபாடுகள் நுட்ப அளவில் இருக்கலாம். ஆனால் மொத்தத்தில் கண்ணகி அளவு இயல்பாகவோ, இளங்கோவளவு வற்புறுத்தலாகவோ அவர்கள் ஊழைக் குறிக்காவிட்டாலும், பொது நிலையில் அவர்கள் கருத்து முற்றிலும் சிலம்புக்கு மாறுபட்டதென்று கூறுவதற்கில்லை. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்ற குறட்பாக் கருத்தைப் பின்பற்றிய புறநானூற்றுப் பாடலில் 'ஆன் முலையறுத்தல்' போன்ற குறிப்புகளால் அவ்வளவு பழங்காலத்திலும் கிட்டத்தட்ட மனுநீதிக்கொத்த பல கருத்துக்கள் வேரூன்றியே இருந்தன என்று காண்கிறோம்.

திருக்குறளிலேயே ஊழ்பற்றிய மூவேறு வகைப்பட்ட வற்புறுத்தல் வேறுபாடுகள் காணக் கிடக்கின்றன.

ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவின்றி
ஓயாது உஞற்றுபவர்.
தெய்வத்தான் ஆகாதெனினும்
முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்.
ஊழிற்பெருவலியாவுள
மற்றொன்று
சூழினும் தான்முந்துறும்.

இவற்றில் முதலாவது குறட்பாவில் முயற்சியின் பெருமையையே முனைப்பாகக் கூறி, ஊழையும், என்ற சிறப்பு வாயால் மட்டுமே ஊழ் வலியுடையதென்ற குறிப்புத் தரப்படுகிறது. முயற்சியின் பெருமைக்கு இலக்கு ஆன பெரியாரது முயற்சி இங்கே ஊழைக்கூட வெல்லும் அளவினது என்று கூறப்படுகிறது. பெரியார் முயற்சியின் பெருமை இங்கே கூறப்பட்டாலும் அது ஊழின் பெருமைக்குக் குறைந்ததே என்ற அறிவொளி கிடைக்காமலில்லை.

அடுத்த குறட்பாவில் முயற்சியின் வற்புறுத்தல் இன்னும் சிறிது. அது பெரியார் முயற்சியன்று. அடுத்தடுத்து முயலும் பொதுநிலையாளரின் நன்முயற்சி. இது ஊழை உப்பக்கம் காணாது. வெற்றிகூடக் காணாது. ஆனால் வெற்றி நோக்கிய படியை வகுக்கும்.

ஊழின் வலியுறுத்தல் மூன்றாவது குறட்பாவில் முழு ஆற்றலுடன் விளங்குகிறது. பொது முயற்சியோ, பெரியார் முயற்சியோ 'சூழினும்', ஓரளவு ஊழின் ஆற்றல் எல்லையில் நுண்ணிய சிறுவெற்றி உண்டானாலும், இறுதியில் ஊழ்தான் **முந்துறும்**. ஊழ் இங்கே கடவுளின் ஆற்றலுக்கு ஒப்பான ஒன்றாகக் கூறப்படுகிறது என்பதில் ஐயமில்லை, பெரியாரது பெருமுயற்சி கூட வெயிலுக்குப் பாதுகாப்பான குடை, செருப்பு ஆகியவற்றின் அளவில்தான் வெற்றி காணமுடியும் என்பதே வள்ளுவரின் முடிந்த கருத்தாகக் கொள்ளலாம்.

ஊழின் வலியுறுத்தல் திருவள்ளுவருக்கும் சங்க இலக்கியத்துக்கும் பெரு வேறுபாடு கிடையாது. ஆனால் சிலம்பில் கண்ணகி கூற்று இதனினும் சற்று மிகுதி வலியுறுத்தலுடையது. பாயிரம், ஆசிரியர் கூற்று ஆகியவை இன்னும் மிகுதியாக, கிட்டத்தட்ட ஆரியக்கோட்பாட்டளவில் வலியுறுத்தலாக அமைகின்றன என்னலாம்.

ஊழ்பற்றிய வள்ளுவர், சங்க இலக்கியம், இளங்கோ ஆகிய முத்திறத்து வேறுபாடுகளையும் மேலே வலியுறுத்து அடிப்படைகளாக மட்டுமே ஆராய்ந்தோம். ஆனால் வேறுபாடுகள் ஊழின் வலியுறுத்துப் பற்றியது மட்டுமல்ல. அதன் பொருள் பற்றிய வேறுபாடு. அதாவது ஊழின்தன்மை, ஊழ் என்றால் என்ன என்ற கருத்துப் பற்றிய வேறுபாடு இன்னும் முக்கியமானது. இதுதான் திருக்குறளின் பழய புதிய உரையாசிரியர்கள் யாவரும் சறுக்கும் இயல்பான இடம் ஆகும். இதை ஆராய்ச்சி மூலமே உணரல் தகும்.

ஊழ்பற்றிய குறட்பா, சங்க இலக்கியம், சிலம்பு ஆகிய மூவகை ஏடுகளின் கருத்தும் ஒன்றுதானா, வேறு வேறா? அதுபற்றிய அவர்கள் கருத்தும் நம் தற்காலக் கருத்தும் ஒன்றுதானா, வேறு வேறா? அதுபற்றி உலக முழுதும் உள்ள கருத்துக்கள் ஒன்றுதாமா, வேறு வேறா?

இவை எல்லாம் ஒன்று என்ற அடிப்படையில்தான் இங்கே கேள்வி கேட்பவர் உட்படப் பல ஆராய்ச்சியாளரும் உரைகாரரும் பேசுகின்றனர், எழுதுகின்றனர், சிந்திக்கின்றனர்.

இம்மூவகைக் கேள்விகளுள் எளிதில் விடை காணவல்லது மூன்றாவது கேள்வி. 'ஊழ்' என்பது பற்றி உலக முழுதும் உள்ள கருத்து ஒன்றல்ல, பல. முக்கியமாக இரு வேறு கருத்துக்களை நாம் உலகில் காணலாம். ஒன்று இந்தியாவில் பிறந்து இந்திய மதங்களுள் ஒன்றான புத்த மதம் சென்ற கீழ்திசை நாடுகளிலெல்லாம் பரவியுள்ள கருத்து. மற்றொன்று இவ்வெல்லைகளுக்குப் புறம்பானது.

இந்திய புத்தமதம் சார்ந்த கீழ்திசை மரபின்படி ஊழ் (Fate or Destiny) என்பதும் வினை அல்லது கர்மம் என்பதும் கிட்டத்தட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது இப்படித்தான் மேல்நாட்டினரும் புத்தமதம் சாராக் கீழ்நாட்டினரும் (இந்தியாவிலேயே உள்ள இசுலாமிய, கிறித்தவ அறிஞரும்) கருதுகின்றனரென்று இந்தியர் நினைத்துக் கொள்வது இயல்பு. ஆனால் வினை அல்லது கர்மம், அதற்கு பின்னணியான முற்பிறப்பு பிற்பிறப்பு என்ற மறுபிறப்புக் கொள்கை, உயிர் புழுப்பூச்சி பறவை விலங்குகள் உடல்தோறும் மாறி மறிப் பிறந்துழலும் என்ற கோட்பாடு ஆகிய இவை இந்தியாவின் கருத்துப் படைப்புக்கள். வெளியுலகம் இந்தியா வந்தாலன்றி எளிதில் உணரவோ, நம்பவோ முடியாதவை. ஆகவேதான் இந்தியாவுக்கும் புத்த சமயத்துக்கும் வெளியே தோன்றி வளர்ந்த கருத்துப் பண்பாடுகள் எல்லாவற்றிலும் ஊழ்என்பது தனி மனிதன் வாழ்வுடன் தொடர்பற்றதாய், கடவுளுடன் தொடர்புடையதாகிறது. அது தனி மனிதன் ஆற்றலன்று, கடவுளின் ஆற்றல்.

இந்தியாவின் படைப்பாகிய ஊழ்க்கருத்தைவிடப் புறஉலகின் படைப்பாகிய ஊழ்க்கருத்துப் பழமையானது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் ஆங்கில முதலிய மேலை மொழிகளில் ஊழ் (Destiny, Providence) என்ற சொல் ஊழ் வலியையும் கடவுளையும் குறிப்பது போலவே, சமஸ்கிருதத்திலும் (விதி = 1. ஊழ்; 2. படைப்புக் கடவுள், நான்முகன்) தமிழிலும் (தெய்வம் = 1. ஊழ்; 2. கடவுள்) குறிக்கின்றன. நம் நாட்களில் தெய்வம் என்ற சொல் தமிழில் கடவுள் என்ற கருத்து ஒன்றையே முனைப்பாகவும், சமஸ்கிருதத்தில் ஊழ் என்ற ஒரு கருத்தையே முனைப்பாகவும் கொண்டுள்ளது காண, இச்சொல்லின் இரு பொருள் குறிக்கும் பழமை வழக்குத் தற்காலத் தமிழுக்கும் இடைக்கால சமஸ்கிருதத்திற்குக் முற்பட்ட பழமையுடையது, அதாவது 2000 ஆண்டுகட்கு மேற்பட்ட வழக்குடையது என்பது தெரியவரும்.

ஊழில் இந்தியாவின் புதுபடைப்பும் ஏறத்தாழச் சென்ற 2000 ஆண்டு காலத்துக்குரியது என்பது தேற்றம். புத்த சமயம் கடவுட் கருத்தை ஏற்காத சமயமாதலாலும், புத்த மதத்துடன் கீழ்திசையெங்கும் இக்கருத்துப் பரவியுள்ளதனாலும், ஊழின் இந்தப் புதுப்படைப்புப் பொருள் புத்த நெறிக்குரியது. அதாவது புத்தர் காலத்துக்கு (கி. மு. 5-ம் நூற்றாண்டுக்கு)ப் பிற்பட்டதென்றும் ஊகிக்க இடமுண்டு.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி பேச்சில் ஊழ் உலகில் எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஊழ் ஆற்றல்பற்றிய கருத்தற்ற வழக்குமட்டுமே. மேல் நாடுகளிலும் கீழ் நாடுகளிலும் பொதுமக்கள் கருத்து இதுவேயாதலால், அது கருத்தற்ற

— 10-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 16-4-'60 | இதழ் 44

முகிழ்த்த தாமரையே! முல்லையே! நீ வாழ்க! நீடுவாழ்க!

மூட நச்செண்ணங்கள், முடைநாறிப்போன பழைமையின் சின்னங்கள் விரி[illegible], ஆழ்ந்து, வேரூன்றிக் கிளை விட்டிருந்த இருண்ட காலம்!

விழியாலும் மொழி பேசி விளங்கு எழிலாலே கதை சொல்லி, நாடி நரம்புகளிலும் இரத்த நாளங்களிலும் முறுக்கேற்றும் திறமை படைத்தவர்கள் கூத்துக் கலைஞர்கள்! இதை உணராது கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கும் வெறும் அலங்காரச் சிலைகளாய் மட்டும் அவர்களை நிற்கவைத்திருந்தனர் அன்று!

"பயன் உள்ள ஓர் ஆற்றல். பலனுள்ள ஒரு பழத்தோட்டம் சிதைக்கப் படுகிறதே!" என்று திராவிட இயக்கத்தார் மட்டுமே வருந்தினர்,

நாட்டு நிலையை மாற்றவும், நாற்றமடித்த இழிசெயல்களைப் போக்கவும் நாம் வகுத்த திட்டங்களும் மேற்கொண்ட போராட்டங்களும் நல்ல பலனை அளிக்கத் தொடங்கின. "வல்லாவட்டு"ப் பாகவதர்கள் நாற்றமெடுத்த கீர்த்தனைகளை முழங்கிக்கொண்டிருந்த மேடைகளில் ஒரு மாற்றம்; வள்ளியும் முருகனும் இந்துத்தானி இசையில் "பிரேம்கர்தாகோ!" பாடி ஆடிக்கொண்டிருந்த அரங்கங்களில் ஒரு மாற்றம்! ஆம்! இசை எல்லாம் தமிழிசையாயிற்று; கூத்தெல்லாம் புரட்சி வெடித்தது!

இந்த வெற்றிமுழக்கத்திற்குத் திராவிட இயக்கத்தினர் அள்ளித் தந்த காணிக்கைகளை மறக்கமுடியாது.

பேரரசி எலிசபெத்தின் ஆட்சியில் நாடகக் கலைஞர்கள் பலர், தாங்கள் இன்னின்ன பெருமகனுரின் குழுவினர் என்று குறிப்பிட்டுக்கொண்டனர். சேக்சுபியர் தம்மை ஒரு பெருமகனுரின் குழுவினர் என்று குறிப்பிட்டுக்கொண்டார். அவ்வாறு நாடகக் கலைஞர்களால் குறிப்பிடப் பெறுவது தமக்குப் பெருமை தருவது என்றெண்ணினர், அன்று, அங்கு, ஆட்சியிலிருந்த அரசியாரும் அவரைச் சார்ந்த பெருமக்களும்.

இன்றும் இங்கிலாந்து அரசினரால் "சர்" பட்டம் தந்து பெருமைப்படுத்தப் பட்டிருக்கிறன், இலாரன்சு ஆலிவர் என்ற நடிகன்.

இந்தியத் துணைக்கண்டத்திலும் கலைஞர்கள் பிரதிநிதி என்று பிருத்விராசகபூரும் கே. பி. சுந்தராம்பாளும் கௌரவிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் அவர்களெல்லாம் காங்கிரசாதரவாளர் என்ற முறையிலேயே அந்தப் பணிமகுடம் சூட்டப்பட்டனர். காலக்கதிரவன்முன் அந்தப் பணிமகுடங்கள் கரைந்தழியும் என்பதை உணராமல் அவர்களும் அதைத் தாங்கினர்.

திராவிட முன்னேற்றக் கழகமோ, இந்த ஓரவஞ்சச் செயலை மறுத்தது. "கலைஞர்களைப் பெருமைப்படுத்த வேண்டும்!" என்ற பொதுமக்கள் எண்ணத்தை ஆளவந்தார் மதிப்பதாகக் காட்டிக்கொண்டு ஏமாற்றும் போக்கைத் தகர்க்க நினைத்தது. கலைஞர்களையும் மதிக்கவேண்டும் என்ற கழகக்குரலைச் செயலாக்கிக் காட்ட நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களை, நடைபெற்ற சட்டமன்ற மேல்சபைத் தேர்தலில் தி. மு. க. வேட்பாளராய் நிறுத்தி வைத்தனர்

தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் பொதுத்தொண்டிலும் கலைவாழ்விலும் புதுமையை வேட்டவர்; புரட்சியை நடத்தியவர். அண்ணாவின் அரிய கருத்துக்கருவூலங்களை அரங்கேற்றி எண்ணற்றோரை ஈர்த்த முதல் கலைஞர் தோழர் கே. ஆர். ஆரே. மக்களால் புயலால் வாடியபோது, அருள் மழை பொழிந்தன அவரது கண்களும் கைகளும். அண்ணனை அடைத்துவிட்டு இவரையும் வாவென்றழைத்தது வெங்கொடுமைச் சிறைக்கூடம்! "நீ எனக்குப் பூஞ்சோலையே!" என்று பாடி நுழைந்தார். உழைத்துப் பெற்ற பொருளை ஈத்து வந்து வாழ்ந்தார். அவர் மக்கள் உள்ளமெல்லாம் நிறைந்தவர்; மக்கள் நல்வாழ்வை நாடும் உணர்ச்சி இதயமெல்லாம் நிறைந்தவர். எனவே, பொது மக்களுடன் தொடர்பு கொண்ட நடிப்பிசைப் புலவரைக் கலைஞர் பிரதிநிதியாக மட்டுமின்றி, பொதுமக்களின் அன்புத் தூதராகவும் அனுப்பிவைத்துள்ளது தி. மு. கழகம். அந்த வெற்றியை இன்று ஈட்டியதில் பெருமை கொள்கிறது தி. மு. கழகம்.

கழகத்தின் சார்பில் சென்னை சட்டமன்ற மேல்சபையில் உறுப்பினராகும் முதல்
தோழர் கே. ஆர். ஆர்!
கலைஞர்களின் சார்பில் போட்டியிட்டு முதன் முதலாக வென்றவர் நடிப்பிசைப்
புலவர்!
"எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்று கூடினால், இந்தக் காங்கிரசு தூளே ஆகும்!"
என்பதைக் காட்டும் பாடத்தைக் கற்றுத் தந்தவர் தோழர் இராமசாமி!
யாரும் பெறாத அளவு 30 வாக்குகள் பெற்று வென்ற தோழரை வாழ்த்துகிறோம்!
வெற்றியை ஈட்டித்தந்த கழக எம். எல். ஏக்களுக்கும், பொதுவுடைமையருக்
கும், பிறருக்கும் நன்றி!
காங்கிரசாருக்கு ஓர் "ஐயோ!"

★

மாறுண்டோ நெஞ்சே!

இருவரும் ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டனர். அவன் அவள்மீது கடந்த அன்பைச் செலுத்தினான். அவளோ தன் உயிரையே அவன் மீது வைத்திருந்தாள். என்ன காரணமோ தலைவியை நெடுநாளாகக் கண்டானில்லன் அவளுக்குக் கோபம் வராதா என்ன? ஒருநாள் திடீரென வந்தான் எதிர்பாராத விதமாக அவள்முன் வந்து நின்றான். அவளை இறுகப் பிடித்து நிறுத்தினான். அவளோ சிறுத்தைபானாள். சீறினாள்! விளைவு? அழகிய நாடகம்போன்ற காட்சி கருத்துக்கு விருந்தாக நமக்குக் கிடைத்தது!

★

"இவன் ஒரு மனிதனா! சீ! வெட்கமற்றவன்! இனிமையை நாடி நான் இருக்கின்றேனா என அறியாது இறுகப்பற்றுகிறான்" என்கிறாள் தலைவி. தலைவனோ இதையெல்லாம் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. பொருட்படுத்தி அஞ்சினால் காரியம் கெட்டுவிடுமே! எனவே அவன் "ஆமாம். இனிமையை நாடி இருக்கின்றாயா இல்லையா என்பதை நான் எப்படி அறியமுடியும்?" என்கின்றான். அத்துடன் நிறுத்தினானா? இல்லையே. "பூங்கொடியே, உன் இளமேனியை இறுகத் தழுவுதல் எனக்கு இனிமை தரத்தக்கது; எனவே தழுவினேன். இதில் தவறு என்ன?" என்றான். எப்படி இருக்கிறது?

தலைவி சும்மா இதைக் கேட்டுக்கொண்டு இருந்துவிடவில்லை. "ஓகோ, உனக்கு இன்பம்தரும் செயலை நீயே நிறைவேற்றிக்கொள்வாயோ? அது அடுத்தவர்க்கு இன்னாதவற்றைச் செய்தால் அது பற்றி உனக்குக் கவலை இல்லையோ" என்றாள்.

சிரித்துவிட்டான் தலைவன் இக்கூற்றினைக்கேட்டு விழுந்து விழுந்து சிரித்தான் அவளுக்கோ சீற்றம் விறு விறு என்று ஏறுகின்றது. தலைவியின் சொற்களை மடக்க ஏற்கனவே பதில்களைத் தயாரித்து வைத்துவிட்ட தலைவன் கூறுகிறான். "இளநங்கையே, கேள்! நீரை உண்கின்றோம். நீர் உண்டால் நீர் வேட்கை தீரும், இனிமையும், குளிர்வும் தரும் என்று உண்கின்றோமா, நீரைக் குடித்தால் நீருக்கு இன்பம் கிடைக்கும் என்று எண்ணிக் குடிக்கின்றோமா"? கூறினான். "வேட்டார்க்கு இனிதாயின் அல்லது நீர்க்கு இனிது என்று உண்பவோ நீர் உண்பவர்" என்று தலைவி திகைத்துப்போனாள். அவளுக்கு என்ன கூறுவதென்றே தெரியவில்லை. நினைத்துப் பார்த்தாள். 'வந்தான்; கையைப் பிடித்து இழுத்தான்; காதல் புரிந்தான், ஏனென்றால் இது எனக்கு இனிமையாயிருக்கிறது என்கின்றான். இவன் இனிமைபெற நான் துன்புற வேண்டுமோ என்று வெளிப்படையாகக் கூறிவிட்டாலும் அவள் உள்ளக்கொதிப்பு எடுத்துக் காட்டிற்று.

இருவரும் இவ்வாறே இருக்கிறார்கள். இருவரும் பலநாள் ஒன்றி வாழ்ந்தவர்கள் தாம். அவள் உள்ளப்பாங்கு அவனுக்கும், அவன் உள்ளநிலை அவளுக்கும் நன்கு தெரியும். எனவே, சற்றுத் தாழ்ந்துபோனால் வென்றுவிடலாம்" எனத் தலைவன் திடீர் முடிவிற்கு வந்தான்! இப்போது பேசுகிறான். 'என் இன்னுயிரே, ஐந்து தலைநாகத்தின் பார்வைக்குள் சிக்குண்டவன்போல உன் மென்மையிற் சிக்குண்டேன். செய்வது அறியேன்! என் செய்வேன்! எவ்வாறு உய்வேன்! மதிபோன்ற முகமுடையவளே, வலிதில் உன்னிடம் இன்பம் பெறலே என்னை உய்விக்கும் இது அறநூல் ஒப்பியதுதானே" என்றான.

நமக்கு வியப்பாயிருக்கும் ஓடோடி வந்தான். அவளது இசைவு இன்றி அவள் மெய்தொட்டுத் தழுவிய செருக்குடைய அதே தலைவன் அதற்குள் 'வேண்டுகோள்' விடும் நிலைக்கு வீழ்ந்து பட்டநிலை நமக்கு வியப்பைத்தான் தரும். இப்போது தலைவியின் நிலை என்னவாக இருக்கக்கூடும்! தலைவனின் சொற்கள் தலைவிக்குப் பெருந் தோல்வியைத் தந்துவிடுகின்றன. முதலில் என்ன விறு விறுப்பும் காரமும் தொனித்தன அவள் பேச்சில்! எங்கே அந்தக் காரம்? பெரிய வீழ்ச்சியே அவளுக்குக் கிடைத்தது. பெருந்தோல்வி கிடைத்தது அவளுக்கு ஆமாம். ஏன் என்னைத் தொட்டாய்? என்று கேட்ட தலைவி தன் தலைவனை இறுகப் பற்றிக்கொள்ளுகிறாள். இது அவளுக்கு நிச்சயம் தோல்விதானே! இருந்தபோதிலும் எவ்வளவு நயமாகத் தோல்வியை ஒப்புக்கொள்ளுகிறாள் என்பதை எண்ணின் உள்ளம்மகிழும்

எண்ணுகிறாள் தனக்குள்ளே, "ஆமாம், நம் தலைவன் செயல் அறநூல்கள் ஒப்புகின்ற செயல்தான், தவறான செயல இல்லை தான்!" என்று. அதன் பின்னர், தான் கூறிய சொற்களைக் கொள்ளாது திறன் இல்லாது நலிவானோ என அஞ்சவும் செய்கின்றாள். இவையெல்லாம்கூடக் காரணமாகவில்லை அவனது பரந்தமார்பை இவள் அடைவதற்கு. என்ன காரணம் அகப்படுகிறது இந்தப்பொல்லாத பெண்ணுக்கு? தன் நெஞ்சை நோக்கிக் கூறுகிறாள்.

"நெஞ்சே, நம் அன்புத்தலைவன் தன்மனதுள் என்ன நினைக்கின்றான். தலைவனும் நானும் முற்பிறப்பிலும் வேறல்லம் என்று அல்லவா எண்ணுகின்றான். இதற்காகவாவது அவனை நாம் மகிழச்செய்யவேண்டாமாஎன்று எண்ணி அவன் கையில் வீழ்கிறாள். தலைவன் நெஞ்சமும் தன் நெஞ்சமும். மாறுகொண்டோ இருக்கின்றன-- இல்லையே என எண்ணமிடுகிறாள். செருக்கு வீழ்ந்தது! எனினும் தனது பெருமை குறையாமல் தலைவனுக்கு உடன்படவேண்டும் என்பதையும் 'முற்பிறப்புக்'க் காட்டிநிறைவேற்றிக் கொண்டாள். முற்பிறப்பை நம்பும் பேதமையை மறந்திடுங்கள்; சுவையைப் பாருங்கள்.

தலைவன் தலைவியரின்அன்புபூண்ட உள்ளம் மிகமெல்லியது; இவற்றுள் ஒன்று நெகிழ்ந்து விடுமேல் வாழ்வில் இனிமை தவழும் என்ற இயல்பறிந்த கபிலர் இக்கருத்துக்களை என்ன அழகாகத் தன்பாடலில் (கலித்தொகை 62) பொதிந்துள்ளார்.

—விருதுநகர் இராசதுரை
எம். ஏ.

மடமை

ஆராய்ச்சிக்கு அப்பால் இயற்கையுருவெடுத்த நந்தமிழாம் செந்தமிழில் தோன்றிய இலக்கியங்கள் மிகப்பல. அவற்றுள் கடல்கொண்டன போக எஞ்சியுள்ளன கண்டே நாம் நமது விஞ்சுபுகழை உலகுக்குக் காட்டிப் பெருமைப்படுகிறோம். நமது பெருமைகளெல்லாம் ஒன்று திரட்டி வைத்ததுபோல் அமைந்த நூல் திருக்குறள் ஒன்றுதான். அதற்கு இணையான நூல் அதற்கு முன்பு இருந்ததோ என்னவோ—அதன்பின் இன்றுவரை எந்த நூலும் அத்துணைப் பெருமையோடு திகழவில்லை. இப்பொழுது அதை உலகமெல்லாம் அறியப்போகிற நல்வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதன்மூலம் ஏனைய நூல்களுக்கும் உலகச் சந்தையில் மதிப்பு ஏற்படத்தான் செய்யும். அந்தக் காலமும் தொலைவில் இல்லை.

ஆனால், உலக மக்கள் நமது தமிழிலக்கியத்தை உற்றுநோக்கும்போது நமது பெருமையையும் புலமையையும் மட்டும் அல்ல; நமது மடமையையும் காணத்தான் போகிறார்கள். மடமை சிறிதேயாயினும் பெருமைக்கே இழுக்கைத் தேடிவிடும் என்பதையும் நாம் உணரவேண்டும். ஏனிதைச் சொல்லுகிறோம் என்றால், அறிவின் எல்லைக்கே சென்று விளையாடும் வள்ளுவன் பிறந்த நாட்டில்தான் அறியாமையின் அடித்தளத்திற்கே சென்ற கயமையும் மடமையும் கலந்த கருத்துக்கள் தமிழ்இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக இரண்டொன்றை மட்டும் காட்ட விழைகிறோம்.

பதினேராம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் புகழேந்திப் புலவர் செஞ்சியில் ஆண்ட தேசிங்கு இராசன் கதையை எளிய நடையில் பொதுமக்களுக்கு வழங்கினார்என்பர். அவர் தனது நூலில் தேசிங்கு ஏறிச் சவாரி செய்த தில்லி அரசனின் குதிரையைப் பற்றி எழுதும்போது "மேகமண்டலம் அளாவி வருது நீலவேணிக் குதிரை" என்று குறிப்பிட்டார். இது, அந்தக் குதிரை மிக வேகமாகச் சென்றது என்ற பொருளைத்தான் தருகிறதே தவிர, வேறொன்றும் சொல்வதாகத் தெரியவில்லை. ஆனால் நாட்டில் உள்ள பொதுமக்களை யார் வேண்டுமானாலும் போய்க் கேட்டுப் பாருங்கள். டெல்லி சுல்தானுக்குச் சொந்தமான அந்தக் குதிரை தெய்வ உலகத்துக் குதிரை என்றும், தேசிங்கு அரசன் ஏறியவுடன் அது மேல் உலகத்துக்குச் சென்றது ஏன்றும் அப்பொழுது அரங்கநாதர் சென்று பூமிக்கே திருப்பிவிட்டார் என்றும் கூறப்படுகிறதே தவிர குதிரையிடம் இருந்த இயல்பான வேகம், வீரம் பேசப்படுவதில்லை இதற்குப் பொதுமக்கள் காரணம்அல்ல; அந்த நூலாசிரியனே காரணமாகிறான். சாதாரணமாகப் "பொலம்பூம் பிண்டி" என்ற சிலப்பதிகாரத் தொடருக்கு பொன் பூவே பூக்கின்ற அசோகமரம் என்று உரையெழுதும் உரைகாரர் தோன்றிய நாட்டில் நூலாசிரியன் செய்கின்ற சிறு தவறும் பெரும் குற்றமாக மாறி, மக்கள் மத்தியில் மடமையை வளர்த்துவிடுமேயன்றிப் புலமையை மிகுத்துவிடாது.

சீதையைத் தேடிச் சென்ற அநுமானின் வீரத்தை விளக்கக் கம்பன் "கடல்தாவு படலம்" எழுதினான். சாதாரணமாகக் கற்பனைத் தேரில் சிந்தனைக் குதிரைகளைப் பூட்டி மடமையின் எல்லைக்கே ஓட்டிச் சென்றான் கம்பன். அப்படியானால் அது மக்கள் மனத்தில் எந்த அளவுக்குக் கயமையை விளைத்திருக்கும்? கல்லாதார் உள்ளத்தைப் பற்றிக் கூட கவலையில்லை; கற்றாரின் மண்டை உள்ளே இருப்பதுகூடவா களிமண்போல் ஆகவேண்டும்? அநுமானுக்கு ஏதோ சித்திகள் தெரிந்திருந்தாகவும், அவற்றைக் கொண்டு அவன் சிற்றுருவும் பேருருவும் கொள்ள முடிந்ததாகவும், அந்தப் பெரிய உருவம் வானத்திற்கும் பூமிக்கும் வளர்ந்து கடலை ஒரே தாண்டாகத் தாண்டியதாகவும் விளக்கவுரையாளர்கள் கதை கட்டுகிறார்கள். அப்படிக் கதை கட்டுபவர்கள் சிறிய எளிய மனிதரும் அல்லர். ஆராய்ச்சித் துறையில் அமர்ந்திருக்கும் பெம்மான்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட கம்பராமாயண சுந்தரகாண்டத்தில் மேற்கண்டவாறு விளக்கங்கள் தரப்படுகின்றன. இதுதான் ஆராய்ச்சித் துறையின் கண்டுபிடிப்பா? இப்படித்தான் தமிழை ஆராய்ந்து வெளிநாட்டுக்கு விற்கப்போகிறார்களா அரசியலாரும்? இவைகளைப் பற்றியெல்லாம் சாட்டை கொடுக்கத் துணிவும் புலமையும் இன்றி 'மலரன்ன கண்ணாள் முகமொத்தியாயின் பலர்காணத் தோன்றல் மதி" என்னும் குறளைத் தூக்கிக்கொண்டு பரிமேலழகர் முதல் மு. வ. அவர்கள் வரை எழுதிய உரைகளெல்லாம் குறையுடையன என்ற "சேவை" புரிகிறது கவியா உள்ளம்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணும் பிறந்ததே இல்லை" என்று பாரதியாரால் புகழப்பட்ட மூவரில், கம்பன்விட்ட சரடுகள் மக்களில் பெரும்பாலோரை மதுமயக்கத்தைவிட விஞ்சிய மதமயக்கத்தில் ஆழ்த்தித் துயிலச் செய்தன. ஏனைய இருவரில் ஒருவரான இளங்கோ ஒரு முற்றத்துறந்த முனிவர் மட்டுமல்ல; கற்றுத் தெளிந்த கவிஞரும் ஆவார். அவரியற்றிய சிலப்பதிகாரம் திருக்குறளுக்கு அடுத்தபடியாக இருக்கும் பெருமைவாய்ந்த நூல் என்பர். அதனுள்ளும் மடமை கலவாமலில்லை. அந்த மடமை விளைத்த காளான்கள் சில தமிழறிந்தார் என்ற பெயரில் நின்று துண்டிக்கப்படாத கண்ணகியின் கொங்கையைத் துண்டிக்கப் பட்டதாகவும், எரியாத மதுரையை எரிந்து சாம்பலாகியதாகவும் செப்பித் திரிவதை நாம் காண்கின்றோம். இவைகளெல்லாம் மேல்நாட்டாரின் கண்களில் பட்டால் அறிவுக்குப் பொருத்தமானதாக அல்லது சரித்திரச் சான்றுகளாக ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதை உணரவேண்டும்.

இவைமட்டுந்தாமா? திருக்குறளையும் திருவள்ளுவரையும் எடுத்துக்கொண்டால் எத்தனைக் கட்டுக் கதைகள் அவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன? அத்தனையும் ஒன்றாகத் திரட்டி மாணவர்க்குப் பாடமாக வைக்கிறார்கள் இன்றுள்ள தமிழகப் பல்கலைக் கழகத்தார். இவற்றைப் படித்து நாளை வெளிநாடு செல்லும் மாணவர் தமிழகத்தின், தமிழிலக்கியத்தின் பெருமையை இப்படித்தான் எடுத்துக் காட்ட வேண்டுமா! இதுதான் பல்கலைக் கழகம் ஆற்றும் தமிழ்ப் பணியா? ஏனோ இதனைச் சிந்திக்க மறந்தனர்.

இவ்வாறு இலக்கியத்தில் எங்கு பார்த்தாலும் கலந்திருக்கும் மடமைக்கு ஒரே ஒரு காரணந்தான் உண்டு. அதுதான் இந்த நாட்டு மதவாதிகளின் அரிய பணி. மதம் எப்பொழுது தமிழில் புகுந்ததோ அப்பொழுது மடமையும் சேர்ந்து புகுந்தது. இதை எவரும் மறுத்து வென்றிட முடியாது. இந்த உண்மையை இன்றுள்ள தமிழ்ப் பெரியாரெல்லாம் மூடி மறைக்கின்றனர். அவருள்ளும் சிலர் மதத்தையே உயிராக எண்ணித் தமிழைப் பாழ்படுத்துகின்றனர். மதத்தினால் தமிழுக்கு வந்த இழுக்கை வெளியிட்டால் எங்கே தம்மை நாத்திகர் என்று எவரும் கூறிவிடுவாரோ என அஞ்சி நடுங்கும் புலவர் கூட்டம், தம்மைத் தமிழறிந்தாராகக் கூறிக்கொள்வதற்கு உண்மையில்வெட்கப்பட வேண்டும். தமிழ்ப் புலவர்கள் என்றாலே புராணந் தூக்கிகள் மதவாதிகள் என்று சொல்லும் அளவுக்குத்தான் சட்டென்று எண்ணம் தோன்றுகிறதே தவிர, உண்மையில் "மொழி வல்லுநர்கள்" என்று சொல்வதற்கில்லை. அவர்களைப் பார்த்து ஒன்று கேட்கிறோம். "மதத்திற்குத் தமிழ் தேவையா? அல்லது தமிழுக்கு மதம் தேவையா? அன்றியும் மக்களுக்குத் தமிழ் தேவையா அல்லது மதந்தான் தேவையா?" என்று கேட்கிறோம். இவற்றைச் சிந்திக்கும்போது மதமின்றித் தமிழில்லை என்று தாறுமாறான முடிவுக்கு வந்துவிடாதீர்கள்.

ஆகையால் மதத்தின் வேர்கள் கணக்கின்றித் தமிழில் ஊன்றிக் கிடக்கின்றன. அவற்றை ஊன்றிக் கவனித்துத் தமிழைத் திருத்த முயலுங்கள். வள்ளுவன் வாய்மொழியாயினும் அதில் கள்ளிகள் புகுந்திருந்தால் களைந்தெறிந்தாக வேண்டும். அப்படிப்பட்ட புலவர்களைத்தான் எதிர்காலம் வரவேற்க இருக்கிறது. இவற்றை விட்டுவிட்டுத் தமிழை வளர்க்க வேண்டிய கடமையிலுள்ளவர்கள் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்பதற்காக மத வாதிகளாக மாறித் தமது பேச்சு வன்மையையும் எழுத்து வன்மையையும் வீணாக்குவது வருந்தத்தக்கதே.

—காவிரிப்புலவன்.

தலைமை நிலையச் செய்தி

தலைமைச் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழு-பொதுக்குழுக் கூட்டங்கள் 1960 மேத் திங்கள் 7, 8 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில், சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் (பவானி அருகில்) நடைபெறும்.

மற்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

'அறிவகம்', சென்னை 13,
9—4—1960.

—தலைமைக் கழகம்
(தி.மு.க.)

கேரளத் தலைநகரில் விழிமயக்கும் காட்சிகள்

திருவனந்தபுரம் பெயருக்கேற்ற அழகுத்திருநகரம், மன்னர்களின் உறைவிடம் என்பதை உறுதிசெய்யும்உல்லாச மாளிகைகளும், வறுமையின் நிறம் படாத வசந்த பவனங்களும், வசீகரச் சீமான்களின் வாழ்க்கை ஏட்டின் பிரதிபலிப்புகளாக ஓடியாடித்திரியும் ஊர்திகளும் நகரத்தின் பெருமையை உயர்த்திக் காட்டிக்கொண்டுள்ளன. மனக்கண்ணுல் எண்ணி மகிழ்ந்த நிகழ்ச்சிகளும் மலைப்பாதைகளை விட்டு நெய்யாற்றங்கரைபோன்றசோலைகளைத் தாண்டி நகரத்தின் எல்லைக்குள் காலடியெடுத்து வைத்தபோது நடனமாடும் அழகுசுந்தரிகளாக எதிர்ப்பட்டன; எழில் உருவம் காட்டின! நாஞ்சில் பகுதியிலேயிருந்து செல்லும் வண்டிகள் எல்லாம் 'சாலைபசார்' என்ற பகுதியில் நிறுத்தப்படுகின்றன. தங்கம் அணிகளும் மணிகளுமாகக்குவிந்து கிடக்கும் பொன் மாளிகைகள் தெருவின் இருபுறமும் நிறைந்துள்ளன! அதிகாலையிலேயே வணிகச் சிறப்பு உயர்ந்த சுறுசுறுப்பினை வரவழைத்து விடுகிறது. நீண்ட பெருவீதியெங்கும் மக்களின் நடமாட்டம் நேரத்திற்கு நேரம் உயர்ந்தது! மதுரையிலே தெற்காவணி மூலவீதி என்ற பகுதியை திருவனந்தபுரத்து சாலைபசாருக்குத் துணையாகச் சொல்லலாம்! பெரும்பான்மை மலைஞால மக்களே வதியும் தலைநகரத்தில் தமிழ்ப்பேசும் மக்கள் இங்கே வாழ்கிருர்கள். "வள்ளுவர் மன்றம்" என்ற பெயரிலே ஓர் அமைப்பினை உருவாக்கித் தம் தமிழ்மொழிப் பற்றினை வளர்த்துவருகிருர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால்தங்களின் இதய ஆசைகளைச் சுழலவிட்டு தாயகப் பெருமை பேசும் கழக நண்பர்களும் இங்கேதான் இருக்கிருர்கள். சாலைபசாரை அடுத்துள்ள தம்பானூர் பகுதியில்தான் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் அலுவலகமும் பகுத்தறிவு மன்றத்தின் இருப்பிடமும் அமைந்துள்ளன! கழகத்தின் செயல்முறைகளைத் தொகுத்துக் கூறி, அவர்களின் இலட்சியப் பெருமையினை விளக்கிக் காட்டினுர்கள் அருமை நண்பர்கள்!

திருவனந்தபுரத்தின் தென் கோடியான சாலைபசார் பகுதியைவிழிகளுக்கு விருந்தாக்கிவிட்டு, மேலே தொடர்ந்தால் கோட்டையைச் சந்திக்கிருேம். மன்னர்களும் மந்திரிகளும் மலைஞாலத்துப் பக்தர்களும் போற்றித் தொழுதிடும் பத்மநுபக் கடவுளின் கோவில் நம்மை வரவேற்கிறது. அதன் அமைப்பும் அலங்காரப் பெருமையும் கண்ணுக்குச் சுவையாகவே இருந்தன. ஆனுல் உள்ளே நுழைய வேண்டுமென்ருல் மேல் சட்டையினை எடுத்துவிட்டுத்தான் வர வேண்டும் என்று சொன்னதைக் கேட்டபோது உள்ளம் கசந்தது. "பெண்கள் வந்தால் என்ன செய்வீர்கள்? மேலாடையை நீக்க வேண்டுமென்று சொல்வீர்களா?" என்று கேட்டேன். காவலாளி திடுக்கிட்டார். தனிச் சலுகைகள் உண்டென்று சொல்லி, "ஆண்களுக்கு மட்டுமே இந்தத் தடை" என்ருர். ஆடையை எடுத்து விட்டுத்தான் ஆண்டவனைக் காண வேண்டுமாம். கன்னியாகுமரிக் கோவிலில் திருநீருலே அடிபட்ட அமைச்சர் இராமசாமி என் நினைவிற்கு வந்தார்! குடும்பம் குடும்பமாகக் குதூகலத்தைக் காட்டிய பெருமக்கள் ஆண்டவனைக் கண்டார்கள்- திரும்பும் அவர்களின் அரையாடை அழகினைக் கண்டுவிட்டுப் புறப்பட்டேன் நான்! கோட்டைப் பகுதியிலேயிருந்து நகரத்தின் எல்லைப் பகுதிகளுக்கும் அயலூர்களுக்கும் வண்டிகள் புறப்பட்டுச் செல்கின்றன. சென்னையில் 'பாரீசு முனை' இருப்பதுபோல திருவனந்தபுரத்திற்குக் கோட்டை அமைந்துள்ளது. உயர்ந்தும் தாழ்ந்தும் உள்ள பெருவீதிதான் நகரத்தின் இதயப் பகுதியாக எல்லா வகையான முக்கிய அங்கங்களையும் தாங்கி நிற்கிறது. திருவனந்தபுரத்தின் அழகையெல்லாம் கண்காணித்து என் போன்ருர்க்குக் களிப்பூட்டச் செய்திடும் மாநகராட்சி மன்றக் கட்டிடம் வெகுவான ஆடம்பரமில்லாமல் காட்சி தருகிறது! திரை அரங்கும் நாடக அரங்கும் ஒன்ருக இணைந்த நகர மன்றம் பெரியதோர் பொலிவுடன் சிகப்புச் சாயத்துடன் நம்மைக் கைகாட்டி அழைக்கிறது. நான் கண்ட நேரத்தில் மாலை விருந்துக்காகத் தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்தது! பொறுப்பாளர்களோ புது வகையான உடைகளுடன் தங்களை அலங்கரித்துக்கொண்டிருந்தனர்.

திருவனந்தபுரம் அறிவாற்றல் மிக்கவர்களின் பிறப்பிடம் - உலகப் பெருமக்களின் உள்ளங்கவர்ந்த உறைவிடம்! சாலை ஓரங்கள் மாலை நேரங்களில் மட்டுமல்ல; எந்த நேரத்திலும் கொடுமையான வெப்பத்தையும் தாங்கிக் கொண்டு பலரைக் காத்திருக்கச் செய்வதைக் காணலாம். பொதுப்பணியாளர்களாக பொறுப்பேற்றுள்ள அனைவரும், ஆடவரும் பெண்டிரும் அணி அணியாக அலங்கார உடைகளுடன் திரண்டு நிற்கும் காட்சி அவர்களின் உழைப்பின் உயர்வையே காட்டுகிறது. கையிலே குடையில்லாத நபர்களைக் காண்பது அரிது. அழகில்லாத மகளிரைத் தேடிக் காண்பதும் தண்டனைக்குரிய செயலாகும். தென்னிந்தியப் புத்தகக் கழகத்தின் கிளை ஒன்று இங்கே இயங்கிவருகிறது. இதயக்களிப்புடன் உள்ளே நுழைந்தேன். ஏடுகளைக் கண்டேன். மலைஞால மொழி இலக்கியங்களே அதிகமாக இருந்தன. தமிழ்நாட்டிலேயிருந்து வரவழைக்கப்பட்டு அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஏடுகள் என் நெஞ்சத்தைப் பிளந்து கணைகளாகத் தாக்கின! தமிழகத்துப் புத்தகக் கடைகளில் இடம் கிடைக்காதவைகள் எல்லாம், இடம் பெற தகுதியற்றவைகள் எல்லாம் திருவனந்தபுரத்தில் தலைநிமிர்ந்து, "தமிழகத்தின், தமிழின் பெருமையை"க் காட்டுவனவாக இடம்பெற்றுள்ளன. புத்தகக் கழகத்தார் புத்திசாலிகள்தான். புரியாத மலையாளிகளுக்கு புரட்சிக் கருத்துக்களைத் தேடித்தராமல் 'ரயில் வண்டிக் கொள்ளை' 'ராவல்பிண்டிக் கொலை' 'டுமில் சத்தம்'போன்ற மர்மக்கதைகளை மட்டுமே கொடுத்துவிட்டுத் தாங்கள் எடுத்துள்ள பணியைக் கெடுத்துக் கொண்டுள்ளார்கள்! இதனை அடுத்த வரிசையிலேயே கம்யூனிஸ்ட் கட்சி ஏடுகளை மட்டும் அதிகமாக விற்பனை செய்யும் பிரபாத் புத்தக நிலையமும், ஆயுர்வேத-சர்வோதய ஏடுகளைத் தரும் மன்றங்களும் அமைந்துள்ளன. இவைகளையும் கண்டேன். பெரும்பகுதி மலையாள மொழியில்; ஆங்கில மொழி பெயர்ப்புக்களும் எண்ணிக்கையிலே அதிகம்! மலையாள மொழியிலேயே உயர்ந்த படைப்புக்களாகக் குமரன் ஆசான் அவர்களுடைய எழுத்தோவியங்களைச் சேகரித்து வைத்துள்ளார்கள். ஏ. கே. கோபாலனுடைய கட்டுரைகளும் பேச்சுத் தொகுப்புகளும் மலையாள மொழியில் அதிகமாக வெளியாகியுள்ளன.

திருவனந்தபுரம் சென்ருல் தவருமல் காண வேண்டிய இடங்களில் அமெரிக்கச் செய்தி நிலையமும் ஒன்ருகும். தனியாக ஒரு நூல் நிலையமும் புத்தகக் கண்காட்சி மன்றமும் உருவாக்கப்பட்டுள்ளன. மாளிகையின் மாடியில் அலுவலகம் செயல்படுகிறது. நூல் நிலையத்தில் அமெரிக்காவின் செல்வச் செழிப்பும் அரசியல் அமைப்பும் கலைப் பொருட்களின் நுணுக்க விளக்கமும் வரலாற்றுப் பெருமைகளின் சிறப்புக் காவியங்களும் தொகுத்தும் பகுத்தும் பிரித்தும் வைக்கப்பட்டுள்ளன. இலக்கியமும் அரசியலும் முதலிடம் பெற்றுள்ளன. தத்துவங்களும் அமெரிக்கக் குடியரசின் கொள்கை கோட்பாடுகளின் விளக்கமும் மிகச் சிறந்த ஆங்கிலப் பதிப்புகளாக நிறைவு செய்யப்பட்டுள்ள நூல் நிலையத்தின் பொறுப்பாளராக ஓர் அம்மையாரும் அவருக்குத் துணையாகக் கல்லூரிப் பட்டம் பெற்ற இரு காரிகையரும் பணியாற்றுகின்றனர். சோவியத் உருசியாவில் எழுந்து ஓய்ந்த அரசியல் புயல் வகைகளின் தொகையான பல கருத்தோவியங்களைக் கண்டேன். இராணுவ முறைகளும், இராணுவக் கட்டுப்பாடுகள் கட்சி அமைப்பிலும் இணைக்கப்பட் செய்திகளும் ஏராளமாகக் கிடைத்தன. ஸ்டாலினிடத்தில் லெனின் கண்ட குறைபாடுகள், ஸ்டாலினும் டிராட்சிகியும் மோதிக்கொண்ட நிலைமைகள் டிராட்ஸ்கி கொல்லப்பட்ட கொடுமை, ஸ்டாலினுடைய சிலைகள் உடைக்கப்பட்ட சோகக் கதைகள், குருசேவ் செய்திட்ட சாகசச் செயல்கள், புல்கானின் மன்னிப்புக் கேட்ட கேவல நிலைகள் முதலிய எல்லாம் ஏடுகளாகத் தரப்பட்டுள்ளன. செஞ்சேனையில் பத்து ஆண்டுகளுக்குமேல் பொறுப்பேற்றுப் பலி பீடத்திலே நிறுத்தப்பட்ட நேரத்தில் தப்பிப் பிழைத்து அமெரிக்கா சென்றுவிட்ட ஒரு இராணுவ அதிகாரியின் நாட்குறிப்புகள் என் கையினின்றும் விலக மறுத்துவிட்டன. முற்பகல் வேலை நேரம் முடிந்துவிட்டதால் நான் நூல் நிலையத்தைவிட்டு வெளியேற நேர்ந்தது! மாலையில் அங்கேரியின் 'எழுச்சியும் வீழ்ச்சியும்' என்ற ஏடு டாங்கிப் படைகொண்டு தாக்கப்பட்டுத் தரை மட்டமாக்கப்பட்ட அங்கேரி மக்களைக் காட்டியது. பள்ளிச் சிறுவர்களின் மீது டாங்கிப் படை துப்பாக்கி மழை பொழியும் புகைப் படத்தைக் கண்டபோது கண்ணீர் துளிர்த்தது!

திருவனந்தபுரத்தின் அமெரிக்கச் செய்தி நிலையம் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நூற்றுக்கணக்கான கிழமை திங்கள் இதழ்களின் கண்காட்சியைத் தினமும் பிற்பகல் 3 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலும் நடத்துகின்றது அந்தப் பெயர்களையெல்லாம் நினைவிலே கொள்ள இயலவில்லை. அறிவுரைகளைத் தருவதுபோலவே அழகான உருவங்களையும் கொண்டுள்ளன! இந்தியாவின் அமெரிக்கத் தூதர்- தில்லியிலிருப்பவரிடம் அனுமதி பெற்றுக்கொண்டால் — இலவசமாகத் தரப்படக்கூடிய ஏடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் செய்தித் திரைப்படம் காட்டுகிருர்கள்! அமெரிக்க அதிபர் ஐசனேவரின்

கூடலரசன்

இந்தியச் சுற்றுப்பயணமும், குருசேவின் அமெரிக்கப் பயணமும் - தென் ஆப்பிரிக்காவில் எழுந்துவிட்ட கிளர்ச்சியின் நிகழ்ச்சிகளும் செய்திச் சுருளாகத் தரப்பட்டன. அமெரிக்காவின் முக்கிய நாளிதழான "நியூயார்க் டைம்சு" "நியார்க் டிரிப்யூன்" - "வாசிங்டன் போச்டர்" - ஆகிய பத்துக்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட ஏடுகள் தினமும் செய்தி நிலையத்திற்கு வந்து சேருகின்றன. அவைகளில் இந்தியாவைப் பற்றிய விமர்சனங்களும், குறிப்புக்களும் அதிகமாகத் தரப்படுகின்றன. இந்த வகையில் பெரும் பயனுள்ள செய்தி நிலையத்தை உண்மையில் மிக அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள திருவனந்தபுரத்திலே உள்ளவர்கள் தவறுகிருர்கள் என்றே எண்ணவேண்டியுள்ளது. எனக்கு ஒருநாள் போதவில்லை அனைத்தையும் காண! கேரளத்தில் கிளர்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த நாட்களில் செய்தி நிலையத்தின் செயல்முறைகள் பாதிக்கப்பட்டதாகப் பொறுப்பாளர் கூறினுர். அங்கிருந்து அனுப்பப்பட்ட தந்தியொன்று எடுத்துக் கொள்ளப்பட்டதாம். ஆனுல் அமெரிக்காவின் குறிப்பிட்ட பகுதிக்கு அது அனுப்பப்படவில்லையாம். காரணம் அஞ்சல் நிலையத்திலேயிருந்த ஒரு "காம்ரேட்" அதனைத் தடை செய்து வைத்தாராம். அதற்கென தக்க தண்டனையையும் பெற்றுக்கொண்டாராம்!

— 11-ம் பக்கம் —

நீலக்கடல்

மா.பாண்டியன்

காலம் :

கடல் கொந்தளிக்கிறது! அதன் இதயத்தில் விளையாடிக் கொண்டிருந்த சூறை பீறிட்டு அடிவயிற்றைக் கிழித்துக்கொண்டு கிளம்பிவிட்டது. ஆம்! துன்பக் கண்ணீர் வான விழிகளிலிருந்து கொட்டுகிறது. வானக் காதலன் வடிக்கின்ற கண்ணீர் கண்டு, கடல் மங்கை குமுறி அழுகிருள். இயற்கையின் நிலை தலைகீழாகிறது.

அலைக் கைவீசி ஆசையைச் சுண்டியிழுத்த நீலக்கடலைக் கண்டு அதனுள் இறங்கியோர் தள்ளாடுகின்றனர். அவர்களுக்கு நம்பிக்கை தந்த படகுகள் புயலின் விளையாட்டுக் கருவிகளாகிவிட்டன. சுழன்றடிக்கும் சூறை, படகுகளைத் தூக்கிப் போட்டு விளையாடுகிறது. பாயைக் கிழித்துக்கொண்டு அப்புறத்தை ஊடுருவிப் பார்க்கிறது. கொடி மரம் முறிந்து விழுகிறது. ஆசையோடு புறப்பட்ட உயிர்கள், அக்கரையைக் காண்பதற்குப் பதிலாக, நடுக்கடலிலேயே மரணக் கோட்டையைக் காண்பதா? கொந்தளிக்கிறது கடல்; தத்தளிக்கிறது உயிர்!

என்ன செய்தான் அவன்? அவள் செய்த பிழை என்ன? வேறொன்றுமில்லை. இருவரும் ஆசைப் படகேறிக் காதல் கடலில் இறங்கினர். திறமைக்கு மீறிய ஆசை; திண்டாடித் தவிக்கின்றனர் இப்போது! வேறு என்ன செய்வர்? காதலைக் கண்டோடி வந்தவர்கள் சாதலுக்கு அஞ்சுவதேன்? ஒன்றின் மீது ஆசை கொண்டோர் மற்றொன்றுமீது வெறுப்புக்கொள்ளலாமா? அந்த ஒன்றை அடைய முயன்றவர்கள்-ஆசைப்பட்டவர்கள், எல்லாவற்றிற்கும் தயாராகத்தான் இருக்க வேண்டும். அஞ்சிப் பயனில்லை!

—உடன் வந்த உயிரோவியம் மண்ணுன பின்பு அவன் மனதில் எழுந்த சிந்தனைகள் இவை. காதல் பார்ப்பதற்கு அழகானது, நீலக்கடலைப் போல. இருந்தும் என்ன பயன்?

ஏறிய படகு ஓட்டையானதாலோ. எதிர்க்காற்று வீசியதாலோ, கொடுஞ் சூறை விளையாடியதாலோ படகுகள் நாசமானதுபோல, இவர்கள்செலுத்திய காதல் படகும் நாசமாகிவிட்டது. கனவு படைத்த காதல் கூட்டில் துயின்ற பேடு மாண்டுவிட்டது; சேவல்மட்டும் சிந்தை மயங்கி நிற்கிறது.

குமரன்மட்டும் இருக்கிருன். சோமாவதி இல்லவே இல்லை! இனி இவன் வாழ்ந்தென்ன? மாண்டென்ன? அவன் இறந்தால் யார் கவலைப்படப் போகின்றனர்? யாரும் இல்லை! ஆனுல் அவன் கவலைப்பட வேண்டியிருக்கிறது! அவன் படும் கவலை ஒன்ருலேயே உயிர் வாழப் போகும் செல்வம் ஒன்றிருக்கிறது!

அதுதான் முத்துவீரப்பரிடம் வளரும் கண்மணி. முத்துவீரப்பர் ஓய்விருக்கும்போதெல்லாம் கோட்டைக்கு வருவார், கண்மணியைத்தூக்கிக்கொண்டு. ஆசையின் மொத்த வடிவமாக விளைந்து வந்த அந்தப் பசிய பயிர் ஒன்றுதான் அவனது வாழ்க்கைக்கு அடிப்படையானது. வேறொன்றுமில்லை, குமரனின் உயிர் உடலில் ஒட்டிக்கொண்டிருந்தமைக்கு. அளவு கடந்த நப்பாசை அவனுக்கு, அந்த ஒரு பயிர் உயர்ந்து வளர்ந்து வாழ்வதில்.

முத்துவீரப்பர் இந்தத் தடவை வந்தபோது அந்தக் குழந்தையுடன் மட்டும் வரவில்லை. துன்பமான செய்தி மூட்டை ஒன்றுடனும் வந்தார். அவனைக் கண்டதும் குழந்தையை அவன் கைகளில் வைத்தார். ஆனுல் இதயத்தை வாட்டிக்கொண்டிருந்த செய்திகளைமட்டும் எடுத்து வைக்க முடியாமல் திண்டாடினுர். இறுதியில் எடுத்தே வைத்துவிட்டார்...

"அப்படியா? சாவு என்னைத் தொடர்கிறதா? சதி என்னை விரட்டுகிறதா? சே! நான் கோழை! நாள்தோறும் எனக்குச் சாவு வந்து வந்து போகிறது! இனி அது என்று வந்தாலும் சரி! கவலையில்லை ஐயா! துன்பத்துக்குள்ளே தலையைப் புதைத்துக்கொண்டிருக்கிறேன். இனி அதை வெளியில் எடுத்தால்தான் வாழ்வு! தலை போய்விடுமே எனப் பயந்தால், ஆகப் போவது ஒன்றுமில்லை! அப்படி அந்த முயற்சியிலேயே தலை போனுலும் கவலையில்லை! தலை ஒன்றுதானே போகும்! அன்ருடம் அஞ்சி அஞ்சிச் சாவதைவிட இன்று ஒரே நாளில் செத்துவிடுவது எவ்வளவோ மேலானது!"

குமரன் குமுறினுன். பெரியவர் "பொறு தம்பி, பொறு!" என்ருர். சதியை மிதித்தழிக்கும் வழிகளைச் சொன்னுர். குமரன் தலையாட்டினுன்.

★

"தந்தநாயக்கே என் பெயர்! இவர் பலதேவர்! நாங்கள் வணிகத்திற்காக வந்திருக்கிருேம். உங்கள் நாட்டு முத்துக்கு உலகெலாம் மதிப்புண்டு. அது பற்றிப் பாடும் ஆயிரம் சேதிகளைக் கேட்டிருக்கிருேம், எங்கள் தாயகத்தில் தான் காட்டும் கலைக் கோவிலில் புத்தனின் திருவடிகளை முத்துக்களால் அலங்கரிக்கும் நோக்கம் எங்கள் மன்னர்க்கு. ஆயிரம் நெஞ்சங்களின் ஆசையுமாகும் அது. அதனுல் தான் உங்கள் மண்ணில் அடி எடுத்து வைத்திருக்கிருேம். ஒப்பம் அளிக்க வேண்டும் தாங்கள்!" என்ருன் தந்தநாயகே.

திருமுடிக்காரியார், "எங்கள் பாண்டியர் நம்பிக்கைக்கும், முத்து விற்போர் நலனுக்கும் இடையூறுகள் ஏற்படாதிருந்தால், அப்படியே ஒப்பம் அளிப்போம்!" என்ருர்.

"வணிகர்கட்கு எதற்கு ஐயனே வம்பும் வழக்கும்? வியாபாரம் குறித்தே வந்திருக்கிருேம்; அரசியல் விவகாரம் எதையும் இழுத்துப் போட்டுக்கொள்ள மாட்டோம்!" என்ருன் தந்தநாயகே.

முத்திரை பதித்த ஓலையில் ஒப்பம் எழுதித்தந்தார் அவர். அவர்கள் இனி, பாண்டிய நாட்டு எல்லைக்குள் எங்கு வேண்டுமானுலும் திரியலாம்.

முத்துச்சந்தையில் சிலர் திரிந்தனர். வேறு சிலர் ஊரைச் சுற்றினர். அவர்கள் சுற்றிச் சுற்றி அலைந்தபோது செய்திகள் பல கிடைத்தன. அத்தனையும் முத்துச்சந்தையில் கூடாரமடித்திருந்த தந்தநாயக்கேயிடம் பறந்தன. தந்தநாயக்கே காலத்தையும் செய்தியையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவையும் வந்து சேர்ந்தன. அவன் கிளம்பினுன்.

★

மலைக்கோட்டையடுத்த காட்டில் உலவிக்கொண்டிருந்த குமரன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். எதிரே தந்தநாயகே! எதிர்பாராத ஆபத்து!

வஞ்சனைக்கு வடிவம் ஒன்று காட்ட வேண்டுமானுல் தந்தநாயக்கேயைச் சொல்லலாம். சிங்கள வெறிமுண்டெரிந்த அவன் விழிகளிலே "பழிக்குப் பழி!"என்ற முழக்கம் கொந்தளித்தது.

"நீயா?"

குமரன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு கேட்டான்.

"ஆம்! அதே தந்தநாயகேதான்! பழிக்குப்பழி வாங்கத் துடித்து, உயிரை மறந்து கிளம்பியிருக்கும் அதே தந்தநாயகேதான்! நீ எங்கும் தப்பிவிடமுடியாது! சிங்கள மண்ணின் பெருமையைக் காக்க எத்தனை வெங்களங்களானுலும் சந்தித்தே தீருவேன்! உன் தமிழ் மண்ணில் உன் குருதியைக் கொட்டியே தீருவேன்!"

"என் நாட்டில் புகுந்து என் நாட்டவரையே கொன்று தீர்க்க முனையும் உன்னை விடமாட்டேன்! அன்னை மண்ணின் பெருமையையும் இழக்க விடமாட்டேன்!"

குமரன் சீறினுன். போராட்டம் நிழல் போலத் தொடர்ந்து வருகிறது. ஆம்! ஈழத்திலிருந்தபோதும் தந்தநாயகே தந்த தொல்லைகள் ஒன்றில்லை; இரண்டில்லை. தப்பித் தமிழகம் வந்து சேர்ந்த பின்னும், கொடுமைக்காரன் கொத்தத் துடிக்கிருனே! எந்த வழி போனுலும் நொந்த முடிவுதானு?

அவனைப் பாய்ந்து கிழிக்கலாம் என்று துடித்து அடி எடுத்துவைத்தான் குமரன். தந்தன் விலகிக்கொண்டான்.

"கரையில் விழுந்த மீன் துடித்தென்ன பயன்? குமுறி வெடித்தென்ன இலாபம்? இப்படித் துள்ளிய மாறநம்பியின் முடிவு என்ன தெரியுமா?"

"கொத்தும் கழுகே! மாறநம்பியின் உடலையும் கிழித்துவிட்டாயோ?"

"ஆம்! அவன் உடலை ஆயிரம் கூறுகளாய்க் கிழித்தேன்! காக்கையையும் கழுகையும். நாயையும் நரியையும் அழைத்தேன்! பருந்துகள் ஓராயிரமும் பறந்துவந்தன! 'சுவை விருந்து தந்தவனே! சுந்தரனே! வந்தனம்! வந்தனம்!' என்று துதி பாடிச் சுவைத்துத் தின்றன.

என் வாழ்வில் நான் செய்ய வேண்டிய இரண்டு கடமைகளுள் ஒன்று முடிந்தது. இன்னொன்றும் முடிந்துவிட்டால் இனி, எனக்கில்லை கவலை! ஆம்! குமரா! ஆம்! மாறநம்பி துள்ளிக் குதித்தான். இப்போது அவன் எலும்புகள் கள்ளி காளான்களுக்கிடையே! அடுத்து நிற்கிருய் எரிமலையெனப் பொங்கும் நீ! மாறநம்பியின் வரிசையில் நீயும்..."

"ஐயோ தம்பி!"

இத்தனை நேரமும் நெஞ்சத்துள்ளே குமுறி அலைமோதிப் போராடிய அத்தனை உணர்ச்சிகளும் ஒரே நொடியில் வெடித்தன; தொண்டை கிழிந்தது!

★

"கண்டுபிடித்து விட்டேன், அந்தக் கயவன் பதுங்கிக்கிடக்கும் கோட்டையை. இனி, நம் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டியதுதான் பாக்கி!"

ஆனுல்...

"ஆனுல் என்ன?" என்ருன் சூரியவாசன்.

"வழக்கமான கேள்வியைத்தான் கேட்கிருய்! திறமையான பதிலை நீயே சொல்லவில்லை!" என்ருன் தந்தநாயகே.

"நான் சொல்கிறேன்! அவனை நாம் இந்த மண்ணில் தந்திரத்தால்தான் கொல்ல வேண்டும். இலங்கையிலே அவனைக் கொன்ருல் கேட்பதற்கு யாரும் இல்லை. தமிழ்நாட்டு மண்ணிலே கொன்றுவிட்டால் தட்டிக் கேட்பதற்கு ஆட்கள் இருக்கின்றனர். இல்லையா, தலைவரே?" என்ருன் பலதேவன்.

"ஆம்! நீ சொல்லியபடிதான் வஞ்சக வழியைக் கையாளப் போகிருேம். ஆனுல் இந்த மண்ணில் வைத்தில்லை; கம்பம் மலையில் வைத்து!"

★

அலைகின்றதும் அதே மனம்தான்; இந்த மலைபோலக் கல்லாய்க்கிடப்பதும் அதே மனம்தான். இப்போது குமரன் மனம் அலைந்துகொண்டிருந்தது.

முத்துவீரப்பர் செய்த ஒரு தவருல் எத்துணைக் கவலைகள்?

முத்துவீரப்பர் ஒன்றைத் தெளிவாகச் சொல்லவில்லை, திருமுடிக்காரியாரிடம். திருமுடிக்காரியாரும் தனக்கு அது தெரியாததால் தானும் பாண்டியனிடம் அதைத் தெரிவிக்கவில்லை. பாண்டியனும் காரியாரும் தெரிந்து கொண்டதெல்லாம் இதுதான். ஈழத்தில் அமலசிங்கேயின் ஆட்சியில் ஏற்பட்ட இனக்கலவரத்தால், உயிரிழந்தவர்கள் பலர். சிங்களப்பெண் ஒருத்தியைக் காதலித்த குமரன் அவளை இட்டுக்கொண்டு ஓடினுன். காடுகளில் சில காலம் வாழ்ந்துவிட்டு, அவளுடன் தமிழகத்திற்குத் தப்பிவந்தான். அவள் இக்கடற்கரையில் ஒரு குழந்தையைப்

பெற்றுப் போட்டுவிட்டு, மாண்டாள். தனியே தவித்த அவனுக்கு முத்து வீரப்பரின் துணை கிடைத்தது.

இவ்வளவுதான் அவர்களுக்குத் தெரியும்.

முத்துவீரப்பர் மட்டும் இதைத் தெரிவித்திருந்தால், இந்தச் சிங்களவர்கள் தமிழக மண்ணையே மிதித்திருக்க முடியாது. இனிவேறு வழியில்லை என்ற எண்ணம் அவனை ஓர் உலுக்கு உலுக்கியது. என்றாலும் கடைசி முயற்சியாக அவன் புருக்கூட்டை அண்டினான்.

'அன்புடைய
முத்துவீரப்பருக்கு,

வணக்கம். குமரன் எழுதுகிறேன். நான் தமிழன்னையின் மண்ணை மிதித்ததும் என் துன்பங்கள் அழியப் போவதில்லை என்று எண்ணினேன். அதுவே உண்மையுமாக விருக்கிறது.

தாங்கள் திருமுடிக் காரியாரிடம் சோமாபற்றிய விவரங்களை முழுவதுமாகக் கூறத் தவறியதால் ஏற்பட்ட தண்டனையை இன்று நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். 'சோமா அமர சேனேயின் தங்கை !' என்பதை ஏற்கனவே திருமுடிக்காரியார்க்குத் தெரிவித்திருந்தால், அவர் தொண்டியில் வந்திறங்கிய சிங்கள வணிகர்களுக்கு அனுமதி தந்திருக்கமாட்டார். அப்படி அனுமதி மறுக்கப்பட்டிருந்தால் வணிகர் உருவில் வந்திறங்கிய சிங்கள ஒற்றர்கள் என்னைக் கண்டுபிடித்திருக்கவும் மாட்டார்கள்.

துட்டகமுனு கட்டும் கலைக் கோவிலுக்கு முத்து வாங்க வந்ததாகச் சொல்லி இங்கு வந்துள்ள அந்த ஒற்றர்கள் என் இருப்பிடத்தையும் கண்டுபிடித்து விட்டனர். அத்தோடு என் உயிரையும் அழிக்கும் முயற்சியில் இறங்கிவிட்டனர். நான் இனி என் உயிருக்கே காவலாளியாக வேண்டி வந்துவிட்டது.

மன்னருக்கும் திருமுடிக்காரியாருக்கும் இதைத் தெரிவிக்கலாமா ? அப்படித் தெரிவித்தால் வீணுகச் சிங்களவர் பகையை ஏற்க வேண்டி வருமா ? எது நல்லதோ அதைச் செய்யுங்கள்; தெரிவியுங்கள் !

ஏனென்றால் நான் என் கண்மணிக்காக வாழ வேண்டியிருக்கிறதே !

தங்கள்
குமரன்.

புரு பறந்தது. இருண்ட வானத்தைக் கிழித்துக்கொண்டு பறந்த புருவோடு அவனது எண்ணமும் பறந்தது.

"அது தொண்டியையடைந்ததும் முத்துவீரப்பர் மடலைக் காண்பார். உடன் பதில் அனுப்புவார். அது கூறும் நெறிப்படி செல்லலாம் !'' என்று தன் திட்டங்களைத் தீட்டிக் கொண்ட குமரன், படுக்கையில் விழுந்தான்.

★

ஊரே அடங்கியபின் சூரியா புறப்பட்டான். வளங் கொழிக்கும் முத்துத் தெரு வழியாக அவன் பார்வை பாய்ந்தது.

தந்த நாயகே கையோடு கொண்டு வந்திருந்த பணமெல்லாம் தீர்ந்து விட்டது. அவன் ஈழத்திலிருந்து பணம் பெற்றுத் திரும்பி வருவதற்குள் நிலைமைகள் மாறினாலும் மாறிவிடலாம்.

ஏற்கனவே ஒருவனைமட்டும் அனுப்பி வைத்திருக்கின்றனர், பணம் பெற்று வர. ஆனால் போனவன் திரும்பி வரவே காணோம் !

ஆனதால்தான் சூரியாவை ஏவினான். சூரியா அந்த ஒற்றர்களுக்கு ஏவலாள். சொன்னதை எல்லாம் செய்து முடிப்பான் ஆயிரம் வம்புகளுக்கு எல்லாம் வித்திட்டுவிடுவான். பின் அத்தனையிலும் தப்பித்துக் கொள்வான். அவனை அனுப்பி வைத்தனர், அந்த நள்ளிரவில்.

அந்த நள்ளிரவோ அவனுக்கு நல்லிரவாக அமையவில்லை. ஒவ்வொரு வீட்டு வாசற்படியிலும், திண்ணையிலும் எவ்வுகிலும் படுத்துக் கிடந்தான். களவில் பெயர் போன சூரியாவின் உடல்கூட அந்தக் காவல்காரர்களின் உடல்களைத் தாண்டிச் செல்ல மறுத்தது. தமிழர்களின் "முரட்டுத்தனம்'' அவன் நினைவில் நின்றே அவனை அச்சுறுத்தியது. நடந்துகொண்டேயிருந்த அவனுக்கு, ஒரு மாளிகையின் வாயிற்படியை ஒட்டி வந்ததும் கால்கள் குத்தூன்றின. அந்த மாளிகையின் முன் பகுதியில் பெரிய தோட்டம். செடிகளும் கொடிகளும் பெருமரங்களும் இருளைப் பரப்பிக்கொண்டு அடர்ந்து நின்றன.

"வாழ்க்கையைச் சுவைக்கிறவன்!'' என்ற அந்த வீட்டுக்காரனைப் பாராட்டினான் சூரியா. ஏதுமில்லாது கூடாரத்திற்குப் போனால் நாளைக் காலையில் எல்லோரும் காய வேண்டியதுதான். அதற்கெல்லாம் மேலாக, கூடாரத்திற்குள் நுழைந்ததும் வெறுங் கையோடு வந்ததற்காக அவன் முதுகு காய்ந்துவிடும்.

"இம்...என்ன செய்வது ?''-தனக்குத் தானே கேள்விகள் கேட்டுக் கொண்ட அவன் கண்களில் அந்த மாளிகையின் வேலியை ஒட்டியிருந்த புருக்கூடு தென்பட்டது. 'போகிற போக்கில் நான்கு புருக்களையாகிலும் பிடித்துப் போனால் கால் வயிருகிலும் காலையில் நிரம்பும் !'' என்றெண்ணியவனுய்ப் புருக்கூட்டிற்குச் சென்று உள்ளே கையை விட்டான். கூடு பெரிதாயிருந்தும் இரண்டே இரண்டு புருக்கள்தான் அகப்பட்டன. ஒலி கிளப்பாமல் இரண்டையும் பிடித்துக்கொண்டு கூடாரத்தை நோக்கி நடந்தான். விடிவதற்குள் அவன் முத்துப்பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

தந்தநாயகேக்கு ஒரேசினம். போயும் "போயும் இரண்டு புருக்களைத் தானு பிடிக்க முடிந்தது ? வெட்கமடா, வெட்கம் !'' என்று இரைந்தவாறே, "அதையாகிலும் கொடுத்துத் தொலை!'' என்று வாங்கினான், ஆத்திரம் தீர அந்தப் புருக்களைத் தரையில் வீசி எறிந்து கொல்லவேண்டும் என்பது அவன் எண்ணம், முதல் புருவை வெறுப்புடன் கையில் வாங்கியவன் அதைத் தரையில் எறிந்து கொல்லப் போகையில் தன் கையில் ஏதோ குத்துவதை உணர்ந்தான்; திருப்பிப் பார்த்தான். அந்தப் புருவின் காலில் ஏதோ ஓலைக்கூடு.

கெடுமதியாளர்களுக்குத்தான் சிந்தனை எப்போதும் குறுக்கு வழியிலேயே போகும் என்பார்கள். தந்த நாயகேயின் மூளை குறுக்கு வழியில் போனது; திரும்பியது.

புருவின் காலிலிருந்த ஓலைக் கூட்டைத் திறந்தான். ஓலை ஒன்று இருந்தது, தமிழில் எழுதப்பட்டு. "தமிழில் ஏதோ எழுதியிருக்கிறது, படி !'' என்றான்.

தமிழைப் படிக்கத் தெரிந்த ஒரு சிங்களவன் அதைக் கண்டதும் படித்தான். அவன் "அன்புடைய முத்து வீரப்பருக்கு'' என்று தொடங்கி "தங்கள், குமரன் !'' என்று படித்து முடிப்பதற்குள் தந்தநாயகே நூறு முறை தன் பற்களைக் கடித்துவிட்டான்.

"டே ! இந்தப் புருவைப் பத்திரமாக வை ! அந்த ஓலையை என் கண்ணெதிரில் தீயில் போடு !'' என்றார்ப்பரித்தான் தந்தநாயகே. அவன் ஆணைகள் அனைத்தும் நடந்தேறின.

குன்றெறிந்தார் குமரனை அழைத்தார். "நாளை நாம் மேற்கு மலையில் வேட்டையாடப்போகிறோம் ! காரியாருடன் மன்னரும் வருகிறார். நாம் நம் திறமையைக் காட்ட ஒரு நல்ல வாய்ப்பு !'' என்றார். வேட்டை என்றால் மாளாத விருப்பம் குன்றெறிந்தாருக்கு.

குமரனுக்கும் வேட்டையில் கொள்ளை ஆசைதான். அப்போதிருந்த அவன் மனநிலையோ கலங்கிய நீராய்க்கிடந்தது. அது எப்போது தெளியும் என்று சொல்வதற்கில்லை. என்றாலும் அவன் மன்னரின் ஆசையை நிறைவேற்ற வேண்டிய கடமையுள்ளவன். நெஞ்சத்தின் கொதிப்புக்களை எல்லாம் காட்டு விலங்குகள்மேல் காட்டித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் இடையில் எழவே அவன் வேட்டைக்கு வர ஒப்பினான்.

வேல்களும் வாள்களும் மின்னின. மார்புக்கவசங்களும் வீரக்கழல்களும் எழுகதிரின் பொன்னொளியில் நனைந்தன. களிறுகளும் புரவிகளும் எழுந்தன. பாண்டியனின் மெய்க்காவல் படையினரும், பொறுக்கி எடுக்கப்பட்ட வேறு சில மறவர்களும் அணிவகுத்தனர். கோட்டைக்காவல் படையினரும் குறிப்பாகக் குன்றெறிந்தாரின்விற்படையினரும் திரண்டிருந்தனர். அனைவர் முகத்திலும், ஆடப்போகும் வேட்டை எழுப்பிவிட்ட வெற்றித் கனவுகள் விளையாடிக்கொண்டிருந்தன. குமரன் முகத்தில் மட்டும் ஓர் உணர்ச்சி திடீரென்று எழுந்தது.

மாமன்னர் வந்தார்; காரியார் வந்தார்; அவர்கள் மட்டுமில்லை; சிங்கள ஒற்றன் தந்தநாயகேயும் வந்தான். திடீரென்று பாண்டிய மன்னருடன் அவன் வந்ததைக் கண்ட குமரன் திகைத்தான்.

கயிறென்று நினைத்து நச்சுப் பாம்பை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டிருக்கிறாரே பாண்டியர். எப்படி நடந்தது இந்தக் கூத்து ? எப்படிப் பாண்டிய மன்னரிடம் தொடர்பு கிடைத்தது இவனுக்கு ? விளங்காத புதிருக்கு விடைதேடி விழிகள் நின்ற நிலையிலேயே நின்றன.

முரசங்கள் முழங்கின; கொம்புகள் ஊதின; களிறுகள் பிளிறின; கட்டுக் கடங்காது நின்ற புரவிகள் கனைத்தன; படைகள் எழுந்தன; மன்னர் கையசைத்தார்.

படை மலைமேல் ஏறியது. விண்ணை முட்டி நின்ற நெடுமரங்களைத் தாண்டினது. கொஞ்சிக்கிடந்த கடுவன்கள் படைகளின் வழி நடைப்பாட்டையும், ஆரவாரப் பேரொலியையும் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தாடின. படை நடந்தது; ஓடியது. பொழுது நன்ருகப் புலர்ந்த வேளையில் அடர்ந்த காட்டை அடைந்தது வேட்டைப்படை.

கரிகளும் பரிகளும் நின்றன. காலாட்படை மறவர்கள் நின்றனர். விற்படை மறவர்கள் விற்களை எடுத்து நாணைத் தட்டிப்பார்த்துக்கொண்டனர். மற்றவர்கள் வாள்களை உறை கழித்தனர்; ஈட்டிகளை எடுத்து வைத்துக் கொண்டனர்.

குன்றெறிந்தார் அரசன் விருப்பப்படி நான்கு பக்கமும் ஆட்களைப் பிரிந்து போகும்படி பணித்தார். தனித்தனிக் குழுவாக நாலாபுறமும் பிரிந்துசென்றனர். அதுநேரம் வரை இருந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் மறைந்து விட்டன. அடிமேல் அடி எடுத்து வைத்துச் சென்றனர். இடுகாட்டு அமைதி நிலவியது.

எங்காகிலும் விலங்குகள் தென்பட்டால் குறிப்பொலி ஒன்று எழுப்பப்படும்; அனைவரும் உடனே ஒலிவரும் இடத்தைச் சூழவேண்டும் என்று ஏற்பாடு.

மன்னர், காரியார், தந்தநாயகே, குன்றெறிந்தார், குமரன் ஆகியோர் ஒரே வழியில் சென்றனர். சில இடங்களில் ஒளியே தெரியவில்லை. நெடுமரங்கள், வெய்யில் கணைகள் உள்ளே நுழைந்து விடாதபடி வேலி போட்டிருந்தன. அவர்கள் பழக்கமுள்ள படியால், இருளில் ஒலி எழுப்பாது விரைவாக நடந்தனர். திடீரென்று தந்தநாயகே "அதோ !'' என்றான். "ஆமாம் ! நல்ல வேட்டை !'' என்றார் காரியார். எல்லோரும் பார்த்தனர். எதிரே இரண்டுநாள் குட்டியொன்றை நக்கிக்கொண்டிருந்தது புலி ஒன்று. இவர்கள் அனைவரையும் அது தலைதூக்கிப் பார்த்தது.

காரியார் சுற்றிப்பார்த்தார்.

"யார் இந்தப் புலியோடு மோதப் போகிறீர்கள் ?'' என்பது போலிருந்தது அவர் பார்வை. அரசனுக்குமுன் தம் திறமையைக் காட்டிப் பெருமை பெற நினைப்போர்க்கு இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள ஆசைதான். ஆனால் எதிரே இருப்பது இளங்குட்டியோடிருக்கும் தாய்ப்புலி. சாதாரணப் புலியை எதிர்ப்பது சிறு விளையாட்டுதான் என்றாலும் ஈன்ற குட்டியுடனிருக்கும் புலியை எதிர்ப்பது பயங்கர சோதனை. மலைப்பாம்பைத் தானே தூக்கித் தன் நெஞ்சில் விளையாட விடுவதுபோல, தாய்ப்புலியை எதிர்ப்பது கடினமாவது. தன் குட்டியைத்தான் தூக்க வருகின்றனரோ என அது சீறிச்சாடும்; பாய்ந்து அறையும். இதை எண்ணியதால் யாருமே முன்வரவில்லை.

காரியார் மறுமுறையும் திரும்பிப் பார்த்தார்.

அவர் பார்த்து முடிக்கும் நேரத்தில், தந்தநாயகே தன்னை முன்னிறுத்தினான்.

"இந்த விபரீதப் போட்டியில் விருந்தாளி கலந்துகொள்ளக்கூடாது ! எங்கள் மறவர்கள் கலந்துகொள்வார்கள். தனியொருவனுய்ச்சென்று தமிழன் புலியை மாய்க்கும் காட்சியை நீங்கள் காணவேண்டும் !'' என்றார் பாண்டியர்.

தந்தநாயகே ஒதுங்கினான். அரசனது குறிப்பை உணர்ந்த மூன்று வீரர்கள் முன் வந்துநின்றனர். ஒருவன் இளவரசன் குலசேகரன்; மற்றவர் குன்றெறிந்தார்; மூன்றுமவன் குமரன்.

புலி எதிரே பத்தடித் தொலைவில் படுத்தபடித் தலை தூக்கிப் பார்த்தது. எதிரே வருபவனை உடன் கொத்தித் தூக்கியெறியத் துடிப்பதுபோல் அதன் கால்கள் தரையைப் பிராண்டிக் கொண்டிருந்தன.

குன்றெறிந்தாரும் குமரனும் விற்களை எடுத்தனர்; குலசேகரன், வாளைத் தடவிப் பார்த்தான்.

தந்தநாயகே வாயைத் திறந்தான்.

—11-ம் பக்கம்—

கருநாடகத்தில்

கோரிக்கைகளும் முழக்கங்களும் கொடியேற்றிவிட்டன! கண்டனங்களும் குமுறல்களும் வெடிக்கின்றன! காங்கிரசினி நிலைப்பதரிது! கழகம் இனி வெல்வதுறுதி!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியையும், வனப்பையும், புகழையும், பொலிவையும் கண்டு பொருமை கொண்டவர்களும், அரசியலுக்கே அவமானமாக விளங்கும் அரியலூர் அளகேசனின் தலைமையில் இயங்கும் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சியினரும் "தி. மு. க. தமிழ் நாட்டில்தான், அதுவும் கொஞ்ச இடத்தில்தான் வளர்ந்த பிஞ்சுக் கட்சி! தி. மு. க.வை கன்னடம் கண்டிருக்கிறதா? ஆந்திரம் அறியுமா அதனை? கேட்டிருக்கிறதா கேரளம் அதன் கொள்கைகளை?" என்று துடுக்குத்தனமாக, தாமும் அடுக்கு மொழி பேசுகிறோம் என்ற அற்ப ஆசையுடன் வாந்தியெடுக்கின்றனர். பாவம், அவர்களுக்கு நாட்டின் நடப்பு என்ன தெரியும்?

தி. மு. க.வின் கொள்கைகளை, உயிருக்குயிரான இலட்சியத்தைக் கேரளம் கேட்டு வருகிறது; ஆந்திரம் அறிந்து இருக்கிறது; கன்னடம் கண்டு களிபேருவகை கொண்டுள்ளது என்பதை நாம் பன்னிப் பன்னிச் சொல்லி வருகிறோம். இருந்தும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்கிறது, அந்த மந்திமதியினருக்கு.

எனவே நாம் கருநாடகத்தில் கழகத்தின் கொள்கைகள் பரப்பப்படுகின்றன; "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற நமது இலட்சிய கீதம் கருநாடகமெங்கும் ஒலிக்கிறது; தினம் தினம் பலப்பல தோழர்கள் நம் கழகத்தில் சேர்ந்து வருகிறார்கள்; புதிய கிளைகள் பல திறக்கப்பட்டு வருகின்றன; தி. மு. க. மட்டுமல்ல–அல்ல–அதன் செல்லப் பிள்ளையான திராவிட மாணவ முன்னேற்றக் கழகமும் துவங்கப்பட்டு பணியாற்றுகிறது; நம்முடைய பேச்சாளர்களுக்கு எழுத்தாளர்களுக்கு நல்ல மதிப்பு இருந்து வருகிறது. நம் கொள்கை வளர நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன; நம் இயக்கத்தைப்பற்றி அறியாதவர்களும், தெரியாதவர்களும் கூட நாம் கூறி வரும் 'வட நாடு வாழத் தென்னாடு தேய்கிறது" என்ற பேருண்மையை எடுத்துக் கூறி வருகின்றனர் என்பதையெல்லாம் நாம் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம்.

தி. மு. க. என்ற பெயரைச் சொல்வதற்குத் தயங்கிய, தி. மு. க. என்று சொன்னால் என்ன ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சிய ஆட்களும், பத்திரிகைகளும்கூட அந்தப் பொன்னான பெயரை எப்படியாவது சொல்லித் தீர வேண்டிய இக்கட்டான நிலைக்கு வந்துவிட்டிருக்கிறார்கள். இதே நிலைமை தமிழ்நாட்டிலும் ஒரு காலத்தில் இருந்தது என்பது இவண் நினைவிற்குரியது. இன்று வெறுப்பாகவோ, வேதனையாகவோ, வேடிக்கையாகவோ, விளையாட்டாகவோ தி மு. க பற்றியும், அதன் கொள்கைகளைப்பற்றியும் பேசித் தீர வேண்டிய நிலைக்குக் கருநாடகத்திலும் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால் அது கருநாடகத்தில் நம்முடைய வளர்ச்சியைத்தானே குறிக்கிறது. இந்த நிலைமை நாளை மாறி, நம்மையே புகழ்ந்து, நம் கொள்கைகளை வியந்து எழுதியும், பாராட்டியும் வராமலா போகிறது?

4-4-60-ம் தேதிய "டெக்கான் எரால்டு" எனும் ஆங்கில நாளிதழில் "சென்னைக் கடிதம்" என்று ஒரு சிறு அரசியல் விமர்சனம் சென்னையைப் பற்றி வந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அந்தப் பத்திரிகைகளில் நம் இயக்கத்தைப் பற்றித் தாக்கியோ, குறைகூறியோ, எப்படியோ விமர்சித்து அடிக்கடி அரசியல் கட்டுரைகள் வருவது வழக்கம். குறிப்பாக நாம் சென்னை நகரசபைத் தேர்தலில் பெருத்த அளவில் வெற்றிபெற்று, மேயரும், துணைமேயரும் நம்மவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததும் அப்பத்திரிகையின் கவனத்தைக் கவர்ந்தது.

இந்தியின் இடத்தில் ஆங்கிலத்தை ஏற்றவேண்டும் என்று ஏ. எல் முதலியார் அவர்கள் கூறியதையும், மேல் சபையில் (சென்னை) கல்லூரிகளில் ஆங்கிலத்திற்குப் பதில் தமிழைக் கற்பிக்கும் மொழியாக மாற்றுவது பற்றி அவர் சொன்ன கருத்தையும், சென்னை சட்டமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் வெளியிடு முன்னே ஓ. வி. அளகேசன் அதை வெளியிட்டது பற்றிய உரிமைப் பிரச்னையையும் எழுதிவிட்டு, முடிவில் அந்தக் கட்டுரையில் நம் கழக சட்டசபை உறுப்பினர்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது.

"சென்னை சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் பெரும்பாலோர் தமிழில்தான் பேசுகிறார்கள். தி. மு. க. அங்கத்தினர்களின் அலங்காரமான அடுக்குமொழி நிறைந்த உரைகளைக் கேட்கலாம்!" என்று எழுதுகிறது, முடிவில் அது மட்டுமில்லாமல் "தி. மு. க. வின் தலைவர் சந்தேகம் தரும் வகையில் சில பிரச்னைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆனால் அவருடைய சகாக்கள் அப்படிப் பேசுவதில்லை." என்றும் முடித்திருக்கிறது.

உச்சரிக்கப்படாத, அருவருக்கத்தக்க சொல் தி. மு. க. என்று கருதி வந்த ஏடும், அது ஒரு கட்சியா, அதைப் பற்றி நம் பத்திரிகையில் எழுதுவதா என்று நினைத்தும் வந்த பதத்திரிகையான "டெக்கான் ஏரால்டில்" நம்மைப் பற்றி நம் சட்டசபை நடவடிக்கைகளைப் பற்றி எழுதுகிறது என்றால், அது நமக்குப் பெரும் வெற்றிதானே! இன்று அருவருப்புடன் எழுதுபவர்கள், நாளை கொஞ்சம் வெறுப்புடன் எழுதுவார்கள். பிறகு, நம்மை ஆதரித்து எழுதும் காலம் வராமலா போகிறது!

மிகப் பெரிய அளவில் திட்டமிட்டு, சீருடனும் சிறப்புடனும், கண்ணியம் கெடாத வகையில், கடமையை உணர்ந்து, கட்டுப்பாடு குலையாமல் பணியாற்றி வந்தால் நிச்சயம் நம் கழகம் தமிழகத்தில் வளர்ந்திருப்பதைவிடப் பன்மடங்கு வளருவோம் என்ன செய்வது? நமக்கு வாய்ப்பும் வசதியும் இல்லையே! பணமும் பொருளும் இல்லையே!

கருநாடக மக்கள் மொழியால், இனத்தால், கலையால், கலைப்பண்பால், நாகரிகத்தால் தென்னக மக்கள் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் ஒன்றுபட்டவர்கள்; நாம் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் சிறிது, சிறிதாக உணர்ந்துவருகிறார்கள்.

மத்திய அரசாங்கத்தால் தென்னகம், புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்பதை உணர்ந்துவருகிறார்கள். ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டுக்கு உரிய பங்கு அளிக்கப்பட்டு வரவில்லை என்றும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது உரிய பங்கு தரப்படுமா என்றும் கொந்தளிக்கின்றனர் கருநாடக மக்கள்.

இதுபற்றி மைசூர் மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இமாம் எனும் மக்கள் சபை உறுப்பினர் மக்கள் சபையில் பேசியது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் மைசூர் வணிகக் கழகத்தின் தலைவராக இருந்த சுந்தரமூர்த்தி அவர்கள் ஒருதடவை "தென்னாட்டில் போதிய கனரகத் தொழில்கள் அமைக்கப்படவில்லை, குறிப்பாக மைசூர் மாநிலத்தில் கனரகத் தொழில்கள் அமைப்பது பற்றி மத்திய அரசாங்கம் பேசுவது கூட இல்லை" என்று சொல்லியிருக்கிறார்.

மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. அனுமந்தையா அவர்கள்கூட, "தென்னாடு மத்திய அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஏன் மத்திய அரசாங்கம் தென்னாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ஓரவஞ்சனை காட்டி நடத்தவேண்டும்?" என்றும் கேட்டிருக்கிறார். மேலும் அவர் "தென்னாட்டில் எத்தனையோ நல்ல பல தொழில்கள் ஆரம்பிக்க வாய்ப்பிருந்தும், கனரகத் தொழில்கள் துவங்க வசதியிருந்தும் கவனிக்கப்படாமல் ஆதரவற்ற நிலையில் இருக்கிறது!" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சிறந்த ஆங்கில எழுத்தாளரும், கருநாடக வாசியுமான கோதண்டராவ் அவர்கள்கூடத் தென்னாடு புறக்கணிக்கப்படுவதைப்பற்றிப் பேசியிருக்கிறார். "வடநாடு வகையாக வாழ, வளம்பல இருந்தும் தென்னாடு கவனிக்கப்படாமல் தேய்ந்து வருகிறது." என்று அறிவுறுத்தியிருக்கிறார் அவர்.

மேலும், மைசூர் சட்டசபையில் "ஐந்தாண்டுத் திட்டங்களில் மைசூர் மாநிலம் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது. ஏன் இந்த ஓரவஞ்சனை? எதற்கு விபரீதப் போக்கு?" என்று கடுமையாக மாற்றுக்கட்சியினர் மட்டுமல்லாமல், ஆளும் கட்சியினரே கண்களில் கண்ணீர் வடிய உரைத்தது எத்துணை தெரியுமா?

மக்கள் சபையில் உறுப்பினராக இருக்கும், எச். சி. தாசப்பா என்பவர் மக்கள் சபையில் "திட்டங்கள் தென்னாட்டுக்குச் சாதகமாகத் தீட்டப்படுவதில்லை. தொழில் துறையில்தான் ஓரவஞ்சனை காட்டுகிறீர்கள் என்றாலும், மற்ற விவசாயத்துறையிலும், நீர்ப்பாசனத் துறையிலும்கூட ஓரவஞ்சனை காட்டுகிறீர்கள். எங்கள் மாநிலங்களுக்குரிய தொகைகள் ஒதுக்கப்படுவதில்லை. கேட்டால் அடுத்த திட்டத்தில் பார்க்கலாம் என்று பூச்சாண்டி காட்டுகிறீர்கள்!" என்று காரசாரமாகப் பேசியிருக்கிறார்.

மைசூர் மாநிலப் போக்குவரத்து இயக்குனர்களின் (Mysore State Road Transport Operators) தலைவர் திரு. உசாகர்சிங் என்பவர் தன்னுடைய துவக்க உரையில்–போக்குவரத்து இயக்குனர்களின் மாநாட்டில் – "போக்குவரத்துக்கு வேண்டிய வசதிகள் செய்ய மாநில அரசுக்கு மத்திய அரசு உதவவேயில்லை. இதனால் போக்குவரத்து சரிவர நடக்க வாய்ப்பில்லை; வசதியில்லை!" என்றார். இதைக் கண்டித்தும், "மாநில அரசு உதவ முன்வர வேண்டும்" என்று கூறியும் தீர்மானமாகப் பேசினார்.

இப்படிப் பலப்பல துறையில் இருப்பவர்களும், அரசாளுபவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வருவதை எடுத்துரைக்கின்றனர்.

முதலில் முணு முணுத்தவர்கள் பின்னர் உரக்கப் பேசினர். இன்று கண்டித்துப் பேசவும், தீர்மானம் நிறைவேற்றவும் முன் வந்துள்ளனர். அப்படியும் மத்திய அரசு கேளாக் காதினராக இருந்தால், "நாடு பிரித்துக் கொடு" என்று பாடுவர் இலட்சியக் கீதத்தை!

"வடநாடு வாழ தென்னாடு தேய்கிறது!" "வளம் பல இருந்தும் தென்னாடு வாடுகிறது!" "தொழில்களெல்லாம் வடக்கே; ஆலைகள் எல்லாம் வடக்கே; அணைக்கட்டுகள் எல்லாம் வடக்கே!" என்று அவலம் பாடுகிறது கருநாடகம்.

பத்ராவதியில் உள்ள உருக்கு ஆலைக்கு மத்திய அரசு உதவ மறுத்ததும், சராவதி அணைக்கட்டுத் திட்டத்திற்கு அந்நியச் செலவாணி அளிக்க மறுத்துப்பின் ஓரளவு அதிருப்தியுடன் அனுமதித்ததும் கோலார் தங்க வயல் சுரங்கத்தை தேசீய மயமாக்க மைசூர் மாநிலம் முயன்று நடத்தும்போது மத்திய அரசு ஓரவஞ்சனை காட்டியதும் ஏற்கனவே தெரிந்தவையே!

இதனால் நாம் கருநாடகத்தில் பெரிய அளவில் வளர வாய்ப்பிருக்கிறது என்றும், இன்று இல்லையேல் நாளை நிச்சயம் கருநாடகம் வடநாட்டை எதிர்த்து விடுதலை கீதம் முழக்குமென்றும் உறுதியாக நம்பலாம். வாழ்க கருநாடகம்! திராவிட நாடு திராவிடருக்கே!

—இரா. மதனகோபால்
பி. காம்., டி. ஐ. பி.,

கல்லூரிக் கவியரங்கம்

6. எழில்

தமிழர்க்குக் கண்களிரண் டுண்டு! வண்ணத்
தமிழாலே "அத்தான்!"என் றிழுத்த ணைக்கும்
குமிழ்ச்சிரிப்புக் காரியிடம் கொஞ்சுங் காதல்
குன்றாத ஒன்றாகும்! உண்மை! ஆமாம்!
இமிழ்கடல்சூழ் உலகில்மற் றொன்றோ, என்றும்
ஈடில்லா வீரமடா! வீரம்! வீரம்!
குமிழ்ச்சிரிப்பு குமரிக்கேச் சொந்தம் போலக்
குவலயத்தில் தமிழர்க்கே வீரம் சொந்தம்!

"மாற்றானுக் குன்றன்மகன் முதுகு காட்டி
மடிந்திட்டான் போர்க்களத்தில்!" என்ற பொய்மைக்
கூற்றினைத்தான் கேட்டவுடன் தமிழ்மு தாட்டி
கூர்வாளைக் கரத்தேந்தி, "என்றன் செல்வன்
ஆற்றாமல் இவ்வாறு மாண்டா னாயின்
அறுத்தெறிவேன் அவன்குடித்த மார்பை!" என்றே,
காற்றாகப் பறந்திட்டாள், உணர்ச்சி பொங்கக்
களம்நோக்கி! இதுவன்றோ தமிழின் வீரம்!

அன்றொருநாள் போர்க்களத்தில் தந்தை மாண்டான்!
அடுத்துவந்த மறுநாளில் கணவன் மாண்டான்!
'தென்றலை'ப்போல் ஆடிவந்த மூன்றாம் நாளில்
திகழ்ந்திடும்போர் 'முரசொலி'யின் முழக்கம் கேட்டே,
இன்றமிழத் தாயொருத்தித் தனது வாழ்வின்
ஈடில்ஒரே ஒருமகனை அழைத்துக், கையில்
நன்றான வேல்கொடுத்துச் 'செல்க!' என்றே
நற்போர்க்கு விட்டதன்றோ தமிழின் வீரம்!

புண்பட்டான் முதுகினிலே சேர லாதன்!
பூதவுடல் நீத்திட்டான் வடக்கி ருந்தே!
புண்பட்டுச் சிறைபட்ட சேர மானும்
புகழ்கொஞ்சும் இரும்பொறைதான் தண்ணீர் கேட்கப்
பண்பட்ட நெஞ்சில்லார் மறுத்தார்! பின்னர்
பறந்துவந்து நீர்கொடுத்தார்! மறுத்தே ஆங்கு
விண்பட்டான்! புகழ்வளர்ந்தான்! மானம் காத்தான்!
வியன்பாரில் இதுவன்றோ தமிழின் வீரம்!

செந்தமிழை இகழ்ந்திட்டான் வடக்கன்! வீரச்
சேரன்செங் குட்டுவனும் புலியாய்ச் சீறி
மந்தமதிகொண்ட அந்த மடையர் தம்மை
மண்டியிடச் செய்திட்டான்! கல்லை ஏற்றிக்
கொந்தளிக்கும் நெஞ்சோடு கொண்டு வந்தே
கோயிலொன்று சமைத்திட்டான், பத்தி னிக்கு!
செந்தமிழா! திராவிடனே! இந்நாள் அந்தச்
சிறுநரிக்கேப் பணிவதுதான் வீர மாமோ?

மரத்தினிலே மறைந்திருந்து பேடி யைப்போல்
மடத்தனமாய்த் தாக்குவதா தென்னர் வீரம்?
கரத்தினிலே வாளேந்திப் "பிணியீர்! கற்புக்
காரிகையீர்! பார்ப்பனரே! உயிரைக் காக்க
உரித்தஇடம் செல்வீர்!"என் றெச்ச ரித்தே
உரிமைப்போர் தொடுப்பதன்றோ தமிழர் வீரம்!
தரத்தினிலே குறையாத உன்றன் வீரம்
தண்டமிழா! இந்நாளில் எங்கே? எங்கே?

வெங்களத்தில் விழுப்புண்படா நாட்க ளெல்லாம்
வீணான நாட்களென்றே வருந்தும் என்றன்
சங்கத்தமிழ் மகனே!நீ பாரில் இந்நாள்
சாக்கடையின் நெளிபுழுவாய் உழல்வ தேனோ?
பொங்குமணி மார்பெங்கே? 'போர்வாள்' எங்கே?
போர்க்களத்தில் மின்னலென வாள்சு ழற்றும்
மங்காத தோளெல்லாம் எங்கே? எங்கே?
மறத்தமிழா! உன்வீரம் எங்கே? எங்கே?

'வேலெடுத்துப் போ!'என்றால், அந்த நாளில்
வேங்கையெனப் பாய்வர்போர்க் களத்தை நோக்கி!
'வேலெடுத்துப் போ!'என்றால், இன்றோ, துள்ளி
விரைவாக ஓடுகின்றார் "பழனி" நோக்கி!
கோலெடுத்தே ஆட்டஆடும் குரங்கு போலக்
குறுமதியோர் வடக்கருக்கே ஆடும் தோழா!
வாளெடுத்துப் போர்புரிய வருவாய்! வெற்றி
வாகைதனைச் சூடுவாய்!'நம் நாடு' மீட்பாய்!

—மணவை க. தங்கவேலன்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

காரைக்குடி-திருக்குறட் கழகத்தார் நடத்திய

8-வது ஆண்டுக் குறள்விழாப் போட்டிகளின் முடிவுகள்.

கவிதைப்போட்டி

முதல் பரிசு:—விரசை. பொ. அரும்பொன், அரசர் கல்லூரி, திருவையாறு

இரண்டாம் பரிசு: நா. மீனாட்சிசுந்தரம், சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்.

மூன்றாம் பரிசு:—சையத அப்துல்ரகுமான், தியாகராசர் கல்லூரி, மதுரை.

தனிப் பரிசு:—மு கிருட்டினசாமி, பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

கட்டுரைப் போட்டி

முதல் பரிசு:—செல்வி பா. சௌந்திரா, அரசினர் கல்லூரி, குடந்தை.

இரண்டாம் பரிசு:—ந. விசுவநாதன், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

மூன்றாம் பரிசு:—எஸ். சோசப் இராசரெத்தினம், இலயோலா கல்லூரி, சென்னை.

தனிப் பரிசு:—துரை-பிச்சை, தருமை ஆதீன தமிழ்க் கல்லூரி, தருமபுரம்.

நாடகப் போட்டி

முதல் பரிசு:—தி. இராசகோபாலன், அரசர் கல்லூரி, திருவையாறு

இரண்டாம் பரிசு:—மெ. மெ. மெய்யப்பன், அழகப்பாக் கல்லூரி, காரைக்குடி.

மூன்றாம் பரிசு:—மெ. பழ. பழனியப்பன், அழகப்பாக் கல்லூரி, காரைக்குடி.

தனிப் பரிசு: யூ. ஹாஹா அமீதுதீன்சா, செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி.

ஓவியப் போட்டி

முதல் பரிசு:—கோயில்சாமு, அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, புதுக்கோட்டை.

இரண்டாம் பரிசு:—பி. முத்தலிபு, மீ. சு. உயர்நிலைப்பள்ளி, காரைக்குடி.

மூன்றாம் பரிசு:—ந சிந்தியசு ஆர்தர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

தனிப் பரிசு:—எம். ஆனந்தராமன், மீ. சு. உயர்நிலைப்பள்ளி, காரைக்குடி.

வெற்றி பெற்றோர்க்கு 1960 சூலைத் திங்களில் நடைபெற இருக்கும் குறள் விழாவில் பரிசுகள் வழங்கப்பெறும்.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

வழக்கு என்று பெறப்படுதல் எளிது. ஆனால் இளங்கோ வழக்கும் பாயிர வழக்கும் தெளிவாகப் புத்த சமயத்துக்குப் பிற்பட்ட கருத்து என்பதில் ஐயமில்லை. சங்க இலக்கியத்தில்கூட நாம் இக்கருத்தைத் தெளிவாகக் காணமுடியாது. இது நாம் மேற்கொண்ட கால ஊகத்துக்கு இயைவதே. ஏனெனில் சங்க இலக்கியம் கி. மு. மூன்றும் நூற்றுண்டுக்கு முன்னிருந்து கி. பி. 2-ம் நூறருண்டுவரை பலரால் பல காலங்களில் பாடப் பட்டது. 'எந்நன்றி கொன்ருர்க்கும்' என்ற குறட்பாக் கருத்துடைய புறநானூற்றுப் பாடல் மிக மூற்பட்ட, கி. மு.. 6-அல்லது 3-ம் நூற்ருண்டுகட்கு உரியது. அப்போதிருந்தே, இப்போது நாம் 'ஆரியம்' என்று குறிப்பிடும் பண்புகளில் ஒரு கூருக, புத்த மதத்தின் புதிய கருத்துக்களில் ஒன்ருக இது பரவத் தொடங்கி, சிலம்பின் காலமான கி. பி. 2-ம் நூற்ருண்டில் அறிஞரிடையே கெட்டிப்பாக முழுதும் உருவாயிற்று என்னலாம். நாலடியார் ஊழ்க்கருத்தில் இன்னும் கெட்டிமையும் வலுவும் உடையது ஆகும்.

திருவள்ளுவர் 'ஊழ்' பற்றிய கருத்து கீழ் நாட்டில் புத்தர் காலத்திலிருந்து பரவிய கருத்தன்று. அதற்குமுன் உலக முழுவதும் பரவியிருந்த கருத்து ஆகும். சங்க இலக்கிய முழுதும் சிலம்பும் திருக்குறட்பாக்களை முடிபடையாகக் கொண்டே கற்புக் கொள்கையை

> 'தெய்வந் தொழா அள்
> கணவன் தொழுதெழுவாள்
> பெய்யெனப்பெய்யும் மழை'

என்ற குறளிலிருந்தும், ஊழ்க் கொள்கையை

> 'ஊழிற்பெருவலியாவுள,
> மற்ருென்று
> சூழினும்தான் முந்துறும்'

என்ற குறளிலிருந்துமே பின்பற்றின. ஆயினும் இரு குறட்பாவின் சொற்களையும் மற்றப் புதுப்படைப்புக் கருத்துக்கள் பரவிய காலத்தில் அவை தவருகவே புரிந்துகொண்டன என்பதில் ஐயமில்லை. இது சங்க இலக்கியக் குறிப்புக்களை ஆராய்ச்சிக் கண்ணுடன் நோக்குவோர்க்கு எளிதில் விளங்கும். உலகெங்கும் பரவிய திருக்குறள் ஆசிரியர் கருத்து, இடைக்காலத்தில் கி. மு. 6-ம் நூற்ருண்டிலிருந்து வளர்ந்தபுத்தமதம்போன்ற நாத்திகக் கோட்பாடுகளின் சூழலில் எழுந்த புதுப்படைப்புக் கருத்துக்களால் பொருள் மாருட்டம் அடைந்திருத்தல் வேண்டும் என்னலாம். ஆயினும் இப்புதுப் படைப்புக்களுக்கும் குறட்பாக்களின் சொற்போக்கு (முந்திய ஊழ்பற்றிய இரு குறட்பாக்கள்) இடம் தருகின்றன. 'துறவு', 'தவம்', 'புகழ்' ஆகிய சொற்களிலும் இதுபோல வள்ளுவப்பொருள் காலப்போக்கில் இழிபுற்று நுண்ணயம் இழப்பது காணலாம்.

கேள்வி கேட்பவர் முற்போக்குக் கருத்துடைய தற்கால இயக்கங்கள் சார்ந்தவர் என்பதில் ஐயமில்லை. அவர் கோணத்திலிருந்துபார்த்தால் ஊழ் பற்றிய தற்கால முற்போக்கு கருத்து (ஊழ் என்ற ஒன்றே கிடையாது என்பதே இது); கீழையுலகின் இடைக்காலப் பழமைக் கருத்து (ஊழ் நம் வினைப்பயனே என்ற கருத்து); மேலையுலகின் பழமைக் கருத்து (ஊழ் கடவுள் ஆற்றலே என்பது), வள்ளுவர் கருத்து (ஊழ்கடவுள் ஆற்றல் அதாவது இயற்கையின் ஆற்றல், ஆனால் அது எல்லா இயற்கை ஆற்றல்களும்போல முயற்சிக்கு ஆதரவு தருவதோ எதிர்ப்புத் தருவதோ அன்று, முயற்சியின் வெற்றி தோல்விகளுக்கே அடிப்படையானது அது என்ற கருத்து) என நால்வகைக் கருத்துக்கள் உள்ளன.

வள்ளுவர் கருத்துத் தற்கால முற்போக்காளர்க்கு மாறுபட்டதல்ல. ஆனால் அதே சமயம் அதுவே உலகில் கீழ்திசைமேல் திசைக் கருத்துக்கள் யாவற்றுக்கும் முற்பட்ட, யாவற்றுக்கும் மூலமுதல் தலையூற்ருன கருத்து என்ற விசித்திர உண்மையின் புதிர்நிலையை வாசகர் இவ்விளக்கத்தில் காணக் கூடும் என்று நம்புகிறேன்.

★



கன்னடியர் எழில் நிலத்தில் சென்னை மேயருக்கும் துணைமேயருக்கும் அண்மையில் வரவேற்பளிக்கப்பட்டது. அதையொட்டி நடந்த ஊர்வலக்காட்சி இது.

சு. தருமர், சுவாமிநாதபுரம்.

''தமிழில் எழுத்துக்கள் முப்பத்தொன்றே. உயிர் 12, மெய் 18, ஆய்தம் 1. இம்முப்பத்தொரு எழுத்துக்களுடன் குற்றியலுகரம், குற்றியலிகரம் இரண்டினையும் சேர்த்தால் 33 ஆகும். இதற்குமேல் தமிழில் எழுத்துக்கள் கிடையா. வேண்டிய முதன்மையும் இன்று இம்முப்பத்து மூன்று எழுத்துக்களைக் கொண்டு உலகிலுள்ள எல்லா மொழிகளையும் ஒலி குன்ருமல் எழுதிக் காட்டமுடியும் என்ற பா. வே. மாணிக்க நாயகர் அவர்களின் கருத்திற்குத் தக்க உதாரணங்களுடன் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேலே தந்த கேள்வியாளர் கேள்விக்குத் தென்றலில் நான் தந்துள்ள விளக்கமே தங்கள் கேள்வியில் உள்ளது. ஆனல் அறிஞர் பா. வே. மாணிக்க நாயகர் முறையையோ அதுபற்றிய என் முடிவையோ விளக்க அச்சகத்தின் தற்போதைய அச்சுருக்கள் தென்றலில் வெளியிடக்கூட எளிதில்இடந்தரமாட்டா என்பதை நீங்களே உய்த்துணரலாம். ஆய்தத்தை (ஆ), குற்றியல் இகரம், உகரம், மகரம் ஆகியவற்றை (கு. இ.), (கு. உ), (கு. ம) என்றும், வட மொழி நான்கு எழுத்துக்களையும் ஆங்கில முறையில் k, kh, g, gh) என்றும், அவற்றின் அரை அங்காப்பு (semi-open) ஒலிகளைக் கீழ் வரையிட்டும், 'சங்கர'னில் வரும் சமஸ்கிருதச் சகரத்தை ஆங்கிலக் கூட்டெழுத்தாகவும் (Sc) கொண்டால் கீழ்வரும் பட்டியலை மாதிரியாகக் கொள்ளலாம்.

தமிழ் அங்காப்பு அல்லது உயிர் எழுத்துக்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ.

தமிழ் இணை உயிர்கள் ஐ, ஔ.

ஆங்கில உயிர் ஒலிகள், 'a' in man-அ (கு. இ); e in model: எ (கு இ);

'ur' in turn: ஏ (கு. இ); 'ai' in fair அ (கு. இ) எ (கு. இ);

பிரஞ்சு ஒலி குறில் ui: உ (கு. இ); நெடில் ui: ஊ (கு. இ); oi: (கு. உ) அ.

பிரஞ்சு ஜெர்மன் குறில் oe: எ (கு. உ); நெடில் oe: ஏ (கு. உ).

பிரஞ்சு அரபு, இந்துக்தானி மூக்கியல் ஒலிகள்: உயிர் (கு. ம).

சமஸ்கிருத மூக்கியல் ஒலி 'ல'கரம்: (கு. ம.) ல.

கிரேக்க இணை ஒலிகள்: ei எ (கு. இ); oi: ஒ (கு. இ); ew: எ (கு. உ); ou: ஒ (கு. உ).

தமிழ் மெய்கள்: தடை (close) அல்லது வலி: க ச த ப ட (ட்ட) ற (ற்ற);

மூக்கியல் (nasal) அல்லது மெலி: ங ஞ ண ந ம ன;

அரை அங்காப்பு (half-open semi-vowels) அல்லது இடை;

ய ர ல வ ழ ள.

சமஸ்கிருதச் சிறப்பு எழுத்துக்கள்: க2 (kh): க்(ஆ); க்3 (g): க் (கு. ம); க 4 (gh): க் (கு.ம) (ஆ)

இதுபோன்றன ச, ட, த, ப வருக்கங்களுக்கும் கொள்க.

ச 5 (sc): (ஆ) ய; ச 6 (sh): (ஆ) ட; ச 7 (s): (ஆ) ச; ச 8 (ksh): க் (ஆ) ட

ஆங்கில F: (ஆ) வ; Z: (ஆ) (கு. ம) ச; zh அதாவது z in azure: (ஆ) (கு. ம) ட.

ஜெர்மன் ch அல்லது கிரேக்க kh: (ஆ) க

அரபு q: க் (கு. உ); அரபு qh: க் (ஆ) (கு. உ); அரபு அலிப்: (கு. இ) அ; அரபு அயின்: (கு. உ) அ; அரபு ஸே (Tt): (ஆ) த; அரபு தால் (dh): (ஆ) (கு. ம) த; இந்தி ட 5 (d): (ஆ) (கு. ம) ட; இந்தி ட6 (dh): (ஆ) (கு. ம) ட் (ஆ).

மேற் குறிப்பிட்ட முறையில் மெய், உயிர் பிரித்தெழுதினல் எழுத்துக்கள் சில பல கூட்டாகத் தோற்றும். ஆயினும் உண்மையில் அவை பிற மொழி ஒலிகளுக்கு மட்டும் உரியன என்பதும், அவ்வழியும் உலகின் எந்த வரிவடிவையும்விட-ஒலியியல் ஆராய்ச்சியாளர் வகுத்துள்ள மேலை முறையை விடக்கூட ஆராய்ச்சி முறையில் தெளிவுபட அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய முறையில் ஒரு அறிவார்ந்த சந்தம் அமைந்திருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது. ஆய்தம் முன் எழுதினல் ஓர் அடிப்படை எழுத்தை அங்காந்து ஒலிக்க எனறும் பின் எழுதினல மூக்கியல் தொனி விலக்கி ஒலிக்க என்றும் குறிப்பாகச் சுட்டிக்காட்டும் ஒரு குறிப்பீடுகயிலிடுகிறது.

குற்றியலிகரம் ஒலிகளை நா-அண்ணங்களில் முன்னேக்கி மிகக் குறுக்கி ஒலிக்க என்னும் குறிப்புடையது.

குற்றியலுகரம் உருட்டி ஒலிக்க என்றும் குறிப்புக்கொண்டது.

குறுகிய மகரம் மென்மையாக்கி அல்லது மூக்கியலாக்கி ஒலிக்க என்னும் குறிப்புடையது.

தனி மெய், தனி உயிர்க்குத் தொல்காப்பியர் அடிப்படை உருக் கண்டு மேற்கொண்டால் இத்தமிழ் வரிவடிவு உலகின் சிறந்த வரிவடிவு என்பது தெரிய வரும்.

★

கடலூர், இராமையா.

'பஞ்ச திராவிடம்' என்பது எவ்வெவ் மாநிலங்கள் உள்ளடங்கியவை? எவ்வொற்றுமையின் கீழ் இப்பெயர் உண்டாகியது?

1000 ஆண்டுகட்கு முன்னிருந்த தமிழகம் (மலையாளம், தென்கன்னடம், தென தெலுங்கம் உட்பட்ட தமிழகம்) ஆந்திரம், கருநாடகம், மராத்தியம், கூர்ச்சரம் அல்லது குஜராத் ஆகியவை பழய சமஸ்கிருத ஏடுகளில் பஞ்ச திராவிடம் எனக் குறிப்பிடப்பட்டன.

பஞ்ச திராவிடத்துக்கு எதிர் மாருன வழக்கு பஞ்ச கௌடம் என்பது. இது இந்திய மாநிலத்தில் வங்கம், சிந்து, குருபாஞ்சாலம், கோசலம், விதேகம் ஆகியவற்றைக் குறிக்கும்.

திராவிட நாட்டில் உருவாகிப் பழமை வாய்ந்த சீர்திருந்திய வடிவம் உடைய இந்துமதமும் நாகரிகப்பட்ட ஒழுக்கமுடைய பிராமண மரபும் பரவி ஏற்கப்பட்டுப் பின்பற்றப்பட்ட மண்டலங்கள் என்ற முறையிலேயே மேற்கூறிய முதல் ஐந்தும் பஞ்ச திராவிட தேசங்கள் எனப்பட்டன. பழங்காலத்திலேயே தென்னக நாகரிகப் பண்பு ஏற்காமல் இடைக்காலத்தில் அயலின வரவுகளாலும் சீர்கெட்டுப் பல திரிபுகளுடன் சிதைந்து வழங்கும் அயல் சமய மொழிப் பழக்க வழக்கங்களையுடைய மண்டலங்களே மற்றக் கௌட தேசங்கள் எனப்பட்டன.

மராத்தி குசராத்தி நாடுகளிலும் பின்னாளைய சோழ ஆட்சி காரணமாக வங்கத்திலும் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியவர்களைப் போற்றும் ஆகம வைணவ சைவ மரபுகள், ஊனுண்ணுமை, ஒருவன் ஒருத்தி குடும்ப முறை ஒழுக்கம், வீட்டுப் பூசை முறைகள், ஊர்க் கட்டுப்பாடு முதலிய திராவிடப் பண்புகள் பரவி நிலவுகின்றன. ★

— ௪-ம் பக்கத் தொடர்ச்சி —

"கருவிகளுடனா? நம்மை எதிர்க்கும் புலி எந்த வாளை ஏந்தி வருகிறது? நாம் மட்டும் ஏன் வாளோடும் வில்லோடும் செல்ல வேண்டும்? அரசே! எங்கள் நாட்டிலும் மாறநம்பி என்றொரு தமிழன் இருந்தான். அவன் வெறுங் கையாலேயே ஆறு புலிகளை அடித்துக் கொன்றிருக்கிறான். அவன் மட்டும் இந்நேரம் இருந்திருந்தால்..."

தந்த நாயகேயின் நா சொற்களை முடிக்கவில்லை. குமரன் எடுத்த வில்லையும் எறிந்துவிட்டு ஓடினான்! ஒரே ஓட்டமாக ஓடினான்! புலியும் ஓடி வந்தது!

தந்தநாயகே மகிழ்ச்சியால் பிளக்கப் போன தன் வாயைப் பொத்திக் கொண்டான். தான் அடைகின்ற ஆனந்தமே, தான் முடைகின்ற சூது வலையைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாதே!

புலி பாய்ந்தது! தன் உயிர் போனாலும் ஒரு தாயின் கடமையை அது நிறைவேற்றித்தான் தீர்வது என்ற துடிப்போடு அது பாய்ந்தது! குமரனும் ஓடினான். கண் இமைக்கும் நேரத்தில் புலியும் குமரனும் அறைந்து கொள்ள வேண்டியதுதான் பாக்கி.

ஒரே இடிமுழக்கம்!

காடு ஆடியது!

தந்தநாயகேயின் உச்சந்தலையை ஆட்டி வைத்தது, வெறி. தன் ஆத்திரத்தை மறைக்கக் கையிலிருந்த வாளை வளைத்தான்.

காரியாரின் விழிகள் தைத்தவை தைத்தபடி இருந்தன.

மோத வந்த புலி தரையில் புரண்டது. குமரன் சற்றே தள்ளிக்கொண்டதால், குறி தவறிய புலி கீழே விழுந்தது. மின்வெட்டின் விரைவோடு பாய்ந்து அதன் வாலைப் பற்றினான், குமரன். மலையைத் தூக்கும் வலிமை அந்த மறவன் தோள்களில் எப்படித்தான் வந்ததோ! வாலைப்பற்றித் தூக்கியவன் அதைச் சுழற்றி வானை நோக்கி எறிந்தான்! ஆடிக் காற்றில் அகப்பட்ட சருகாய்ப் பறந்த அப்புலி பேரொலியுடன் தரையில் விழுந்தது.

விழுந்த புலி விநாடிகள் சில பறந்தும் அசைவற்றுக் கிடந்தது. தூரத்தில் கிடந்த குட்டி, ஏதுமறியாது தன் வாலை நக்கிக்கொண்டிருந்தது.

குமரன் அடிமேல் அடி எடுத்து வைத்தான். மயங்கிக் கிடக்கும் புலியின் மேல் அவன் விழிகள் பதிந்திருந்தன. அடிபட்ட புலி, அத்தோடு மாண்டுவிடுமா? உயிர்பெற்று எழுமா? கணிக்கமுடியாத நிலை! மறுபடியும் ஒரு முறை தூக்கிச் சுழற்றிவிட்டால், அத்தோடு அதன் கதை முடிந்துவிடும்.

மெதுவாக ஊர்ந்து சென்றவன் திடீரெனத் திரும்பி ஓடினான். மயங்கிக் கிடந்த புலி திடீரென எழுந்து அவனை விரட்டியது. தலைதெறிக்க ஓடிய குமரன் ஒரு மரத்தின் பக்கத்தில் ஒதுங்கிப் போக்குக் காட்டினான். அவனை மரத்தோடு சேர்த்து வைத்து அறையத் துடித்துப் பாய்ந்த புலியின் கால்களுக்கு மரத்தின் பட்டைதான் பட்டுத் தனித்து விழுந்தது.

மறு முறையும் அவனை நோக்கி ஓடியது புலி. அவன் விரைந்து ஒதுங்கி அதன் வாலைப் பிடித்தான். கவணிலிருந்து விடுபட்ட கல் ஓடுவதுபோல புலியின் உடல் பறந்தது.

தந்தநாயகேயின் கைகளில் சிக்கித் துடித்த வாள் இரண்டாய் முறிந்தது.

புலியின் போக்குக் கீழே விழுந்தும் தளரவில்லை. முன்னைவிட நேரங்கழித்து எழுந்தாலும், எழுந்ததும் நேரே குட்டியிடம் ஓடியது. குருதி ஒழுகும் நாவால் குட்டியை நக்கியது. குட்டியிடம் அது பொழியும் அன்பைக் கண்ட குமரனின் நெஞ்சும் இளகியது.

ஈன்ற குட்டி எழுந்து நிற்க முடியாத நிலை. அதன்மீது ஆயிரம் ஆசைகளை வைத்திருக்கும் அந்தப் பேதை புலியையா கொல்வது? அப்படிக் கொல்வதால் என்ன பயன்? அவன் உள்ளத்தில் பிள்ளைப் பாசம் பெருக்கெடுத்தது.

"நான் என் குழந்தைக்காக வாழ எவ்வளவு துடிக்கிறேன்? என்னைப் போலத்தானே அதுவும் துடிக்கும்? அதையா கொல்வது? கூடாது! கூடாது!"

பச்சாத்தாபம் இப்படி மனதைத் தொட்டதும் அவன் வந்த வழியே திரும்பினான். சலனம் ஏதுமற்ற துறவி போல் திரும்பினான்; நடந்தான்.

காரியாரும் பாண்டியரும் "குமாரா!" என்று ஒரே நேரத்தில் அலறினர். அவன் திரும்பி வரும் அவமானத்தைக் கண்டில்லை!

குட்டியுடனிருந்த புலி குமரனின் முதுகை நோக்கிப் பாய்ந்தது!

— அடுத்த இதழில் —

— 5 ம் பக்கத் தொடர்ச்சி —

மொத்தத்தில்அமெரிக்க அரசினர்வெளி நாடுகளில் பொதுவுடைமையை அழிக்க மேற்கொள்ளும் பிரசாரக் கருவிகளின் வலிமையை இந்நூலகம் காட்டுகிறது

திருவனந்தபுரத்து அமெரிக்கச் செய்தி நிலையத்தைவிட்டு வெளியேறிய போது புது உலகம் கண்ட பூரிப்புடன் எங்காவது சோவியத் யூனியனுடைய செய்தி நிலையம் உண்டா என்று எண்ணிக்கொண்டே பார்வையைச் செலுத்தினேன். எதிர்ப்பட்ட நண்பர் ஒருவரிடம் கேட்டேன்! "கேரளக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம்தான் சோவியத் யூனியனுடைய செய்தி நிலையம். அது இருக்கும்போது தனியாக ஒரு இடம் ஏன்? அங்கே சென்றால் உங்களுக்கு எல்லாச் செய்தியும் கிடைக்கும்!" என்று ஆங்கிலத்திலே பேசினார். அவருடன் பேச்சை வளர்த்திருந்தால் இன்னும் பல செய்திகள் கிடைத்திருக்கும். ஆனால் நீண்டநேரம் ஒரே இடத்தில் தாமதிக்க இயலாததால் ஆயுர்வேதக் கல்லூரி - திருவனந்தபுரம் மாவட்டத்தின் பிரசாசோசலிச அணியின் அலுவலகங்கள் இவைகளையெல்லாம் தாண்டி நகராட்சி மன்றம் நடத்தும் பொதுமக்கள் நூல் நிலையத்தை அடைந்தேன்! சென்னை கன்னிமாரா நூல் நிலயத்தை நினைவூட்டியது! அமைதியும் நிலவியது - நிலையமும் நிரம்பியிருக்கவில்லை! "இலண்டன் டைம்சு" போன்ற வெளிநாட்டு ஏடுகளும் திருவனந்தபுரத்து மலையாள தினசரிகளான 'தேசாபிமானி' 'கேரள கௌமதி' போன்றவைகளும் காணக்கிடைத்தன. மன்னரும் மகாராணியாரும் கொண்ட பெரிய அளவுப் புகைப்படமும் வண்ண ஓவியங்களும் உள்ளன! 'விக்டோரியா நினைவு நூல் நிலையம்' எனப் பெயர் பெற்றுள்ளது. நகர மன்றம்கூட இப்பெயராலேயே அழைக்கப்படுகிறது. தினசரிச் சந்தை ஒன்று 'கன்னிமாரா' எனப் பெயர் பெற்றுள்ளது! சந்திரசேகர நாயரின் விளையாட்டு மைதானம் நகரத்தின் எழிலுக்குத் துணை சேர்க்கிறது. விடுதலைப்போரில் உயிர்நீத்த வீரர்களின் நினைவுச்சின்னத்தை இராசேந்திர பிரசாத் திறந்துவைத்துள்ளார். திவான் மாதவராவின் சிலையும் இந்தத் தெருவில் உண்டு!

— மேலும் வரும் —

தலைமைக் கழக அறிக்கை 4/60

தி. மு. கழகப் பொதுத் தேர்தல்

1. 1959-இல் நிறைவேற்றப்பட்ட தி. மு. கழகத்தின் புதிய சட்டதிட்டங்கள், விதி 29 பிரிவு 4-ன்படி கழகத்தின் பல்வேறு அமைப்புக்களுக்கான தேர்தல் நாட்கள் கீழ்க்கண்டவாறு உறுதிசெய்யப்படுகின்றன :—

	அமைப்புக்கள்		தேர்தல் நடைபெறும் நாள்
(அ)	சிற்றூர்-பேரூர்க் கிளைகள், பெருநகர உட்கிளைகள்	...	1960 மே 22 ஞாயிறு
(ஆ)	நகரக் கிளைகள் (சென்னை நகர வட்டக் கிளைகள்-பெருநகரக் கிளைகள்)	...	1960 சூன் 5 ஞாயிறு
(இ)	வட்டக் கிளைகள் (சென்னை நகரப் பகுதிக் கிளைகள்)	...	1960 சூன் 19 ஞாயிறு
(ஈ)	மாவட்டக் கழகங்கள்—(மாநில அமைப்புக் குழுக்கள்)	...	1960 சூலை 3 ஞாயிறு
(உ)	தலைமைக் கழகம்	...	1960 சூலை 17 ஞாயிறு

2. இப்பொழுது புதுப்பித்தும் புதியதாகச் சேர்த்தும், தலைமைக் கழகத்திலிருந்து உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொள்ள உரிமை உடையவர்கள் ஆவார்கள். (காலங்கடந்து உறுப்பினர் விண்ணப்பத்தாள்களை அனுப்பிவைத்தவர்களுக்கும் புதிதாகச் சேரவிரும்புபவர்களுக்கும் 1960 ஆகஸ்டு திங்கள் 1-ம் நாளுக்குப் பிறகுதான் உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கப்பெறும்.)

3. 'நம் நாடு' இதழில் வெளியிடப்பட்டுள்ள கிளைகள் மட்டுந்தான் மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் தேர்தலை நடத்த உரிமைபெற்ற கிளைகளாகும். (காலங் கடந்து விண்ணப்பத்தாள்களை அனுப்பிவைத்துள்ள கிளைகளும், புதிதாகத் தோன்றி உறுப்பினர்களைச் சேர்த்துள்ள கிளைகளும் 1960 ஆகஸ்டு 1-ஆம் நாளுக்குப் பிறகுதான் அந்தந்த வட்டச் செயலாளரின் மேற்பார்வையின்கீழ் முறைப்படி தேர்தலை நடத்தவேண்டும்.)

4. தேர்தலை நடத்தும் முறைகள், கிளைகள், உறுப்பினர், தேர்தல் ஆணையாளர், வேட்பாளர் (அபேட்சகர்) ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத்தாள் போன்ற விவரங்கள், தலைமைக் கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ள 'தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டிருக்கின்றன. (தேர்தல் விதிமுறை வெளியீட்டை உரிய கட்டணம் செலுத்தித் தலைமைக் கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.)

'அறிவகம்', சென்னை-13,
12—4—1960.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

செழியன் உலா

தூக்கம் எப்போதும் என் விழிகளைச் சுழற்றும். குளித்தாலும் சரி; குளிக்காவிட்டாலும் சரி. அலைந்தாலும் சரி; அலையாவிட்டாலும் சரி. தூக்கம் தானே வந்துவிடும், நேரம் காலமில்லாமல் என் நண்பன்கூடச் சொன்னான் "டே! இப்படித் தூக்கத்தில் மன்னர்களாய் இருப்பவர்கள் தான், இனிமேல் மந்திரிகள்!" என்று. நான் அந்தப் பேரானந்தத்திலேயே தூங்கிவிட்டேன். நண்பன் தான் சொல்லிவிட்டானே, தூங்கத் தெரிந்தவன்தான் ஆளத்தெரிந்தவன் என்று. இனி என்ன வேண்டும்?

x　x　x

நான் தூங்கிவிட்டபடியால், என் எண்ணம் மட்டும் உலாவப்போனது!

x　x　x

எதிரே ஒரு பள்ளி மாணவன் வந்து கொண்டிருந்தான். அவன் தோளில் ஒரு பை. அதில் நாலைந்து புத்தகங்கள். ஏழெட்டு நோட்டுகள்.

"புத்தங்களா? படிக்கலாமா?" என்றேன்!

"இம்" என்று சொல்லிவிட்டு அவன் தூங்கத் தொடங்கிவிட்டான்.

நான் படித்த பகுதிகளை அந்தப் புத்தகங்களின் தலைப்போடு தருகிறேன். நீங்களும் பாருங்கள்.

சரித்திரப்புத்தகம் :

"காந்தி என்ற கடவுள் அவதாரத்தை நீங்கள் அறிவீர்கள். அவரின் பரம்பரையாக வந்துதித்தவர் பண்டிதர் நேரு. இவர் பழனிமலை ஞானபண்டிதரின் சொந்தக்காரரோ என்று யாரும் ஐயுற வேண்டாம். இப்பண்டிதர் காசுமீரத்திலே பிறந்தவர். அது ஏழு சொர்க்கங்களில் ஒன்றாகும். மற்ற ஆறு சொர்க்கங்கள் பம்பாய், அகமதாபாத், சிந்திரி, ரூர்கேலா, பிலாய் என்பனவாகும். அந்தக் காலத்திலே பண்டிதரானவர் தனது அருளைக் கொட்டி, தெற்கே உள்ள நரகத்தில் சிலரை வாழவைத்தார்.

இந்தப் பண்டிதர்பிரான் சமாதானம் என்ற புறுவை வைத்திருந்தார். அதை அடிக்கடி வானில் பறக்கவிட்டு வேடிக்கை பார்ப்பார். அதன் பெருமையை விளக்க, "பஞ்சர்சீலம்" என்ற பாடலை அடிக்கடிப் பாடுவார். ஓய்விருக்கின்ற நேரத்திலெல்லாம் மனித வேட்டையாடக் கிளம்பிவிடுவார். இதனால் இவருக்குப் "பத்தாயிரம் தலை வாங்கிப் பயங்கரப் பண்டிதர்" என்ற பெயரும் உண்டு. இவரது முடிவு பற்றிச் சரியாக எதுவும் தெரியவில்லை!

நீதி நிர்வாகம் : இவரது ஆட்சியில் இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்னாது பதவிகள் வழங்கப் பட்டன.

சொர்க்கங்கள் இருந்த பகுதியில் பல சுவையான நிகழ்ச்சிகள். பொதுத் தொடர்புத்துறை என்று ஒன்று இருந்தது. எங்கும் வேலை கிடைக்காதவரும் எந்த வேலைக்குத் தகுதியற்றவரும் இந்தத் துறையில் உடனடியாகச் சேர்த்துக்கொள்ளப் பட்டனர்.

சொர்க்கங்கள் இருந்த பகுதியை ஒரு கூட்டத்தார் வடக்கு என்றனர். இந்த வடக்கில் ஒரு முதலமைச்சர். அவர் இரண்டு மூன்று முறை முதலமைச்சராக இருந்தார். அவர்கீழ் அமைச்சராயிருந்து "முன்னாள் அமைச்சர்" ஆன மற்றொரு முதியவர் எந்த வேலையும் இன்றித் திண்டாடினார். 'ஐயோ, முதலமைச்சரே! உம்கீழ் ஊழியம் புரிந்தவன் எந்த வேலையும் இன்றி அலைந்து வாடலாமா? சரிதானா? எனக்கு ஏதேனும் வேலை போடுங்கள்!" என்று கெஞ்சினார். உடனே முதலமைச்சர் பதவியிலிருந்தவர் ஆகா! ஆருயிர் நண்பரே! நீங்கள் அல்லற்படலாமா? இதோ! நண்பரே பிடியுங்கள், இந்தப் பதவியை. இன்று முதல் நீங்கள் இந்த மாநிலத்தின் **தகவல் அதிகாரி!** அதாவது பொதுநலத் தொடர்புத் துறையில் நீங்கள் ஓர் அங்கம்! உங்கள் ஊதியம் மாதத்திற்கு ஆயிரம்! படிகள் வேறு உண்டு. எந்தத் தகவலையும் நீங்கள் அறியவேண்டியதில்லை. நீங்கள் தகவல் அதிகாரி என்பதை மட்டும் அறிந்திருந்தால் போதும்!" என்றார். அன்றுமுதல் அவர் மாதம் ஆயிரம் ரூபாய் பெற்றுக் கடமை தவறாது உழைத்துவந்தார்!

மற்றொரு மாநிலத்தில் மாநில அமைச்சராயிருந்து பின் தில்லிப் பாராளும் மன்ற உறுப்பினரான ஒருவர், தன் மகனுக்குப் பதவி தேடியலைந்தார். எந்தப் பதவியும் கிடைக்கவில்லை. என்ன செய்வார், பாவம்? தன் மகனைக் கூட்டிக் கொண்டு அலைந்தார். தன் திறமையை எல்லாம் பயன்படுத்தினார். இறுதியில், சில நாட்களில், அவர் மகனுக்கு மாதம் ரூ. 1500 சம்பளத்தில் பொதுத் தொடர்புத்துறை அதிகாரி பதவி தரப்பட்டதாக நம் ஆராய்ச்சிக்குத் தெரியவருகிறது. மற்றும் பல இப்படி நடந்தன என்றாலும் சுவைக்கு ஒன்றாய் எடுத்துக்காட்டினால், இவ்வாட்சியின் இரக்கம் தெரியும் என்றறியலாம். மேலும் இவ்விரண்டு பதவிகளும் புதிதாக உருவாக்கித் தரப்பட்டனவே என்பதையும் அறிய வேண்டும்."

x　x　x

அறிவியற் சுவடு :

"உணவுகள் பலவகையாக அமைந்தாலும் நம் முன்னோர்கள் கி. பி. 1947-க்குப் பின் உண்ட உணவு வகைகளே சத்து நிறைந்தவை. தில்லி உணவுஅமைச்சராய் 1960-ல் இருந்தவர் தானியங்களை அதிகமாக உண்பதைவிட, காய்கறிகளை அதிகமாகத் தின்னுதல் உடம்புக்கு நலம் என்றார். இந்திய விஞ்ஞானிகள் அனைவரும் கூடி இதனை ஆராய்ந்து, பனங்காய், வேப்பங்காய், குமுட்டிக்காய், உதியங்காய், காஞ்சிரங்காய் முதலிய காய்களையும், வேறு சில கறிகளையும் சிபார்சு செய்தனர். அக்கறிகளுள் பிணக்கறி, பெருச்சாளிக்கறி முதலியன சில. அவற்றை நம்முன்னோர்கள் தின்று திடமாக வாழ்ந்தார்கள். அதை மக்கள் அப்படியே ஏற்றுத் தின்றனர்; உடல் பருத்தது. இவருக்கு முன்னால் இருந்த மற்றோர் அமைச்சர் உடல்பசி தீரப் புண்ணாக்கே சாலச் சிறந்தது என்றார். மக்கள் அன்று முதல் இன்றுவரை அதையே தின்று வருகின்றனர். இந்தப் புண்ணாக்கில் நாவுக்குச் சுவையும் வைட்டமின் சத்துக்களும் இருப்பதாக மதிப்பிற்குரிய காங்கிரசு விஞ்ஞானிகள் கூறினர். அத்தோடு இப்புண்ணாக்கு எளிதில் செரிமானம் ஆகிறது என்பதையும் அறிக. ¼ பவுண்டு புண்ணாக்கு ஒவ்வொருமனிதனும் கட்டாயம் உண்ண வேண்டும்; அதனால் பால், நீர், அரிசி முதலியவற்றில் கிடைக்காத பலனெல்லாம் கிடைக்கும்!"

x　x　x

"ஆகா! நம்மக்கள் புண்ணாக்கா தின்கின்றனர்? இவ்வளவு பெருமையுள்ளதா நம் பழம் வரலாறு!" என்று எழுந்தோடினேன், சரித்திர ஆசிரியரையும், மற்ற விஞ்ஞான ஆசிரியரையும் பாராட்ட. ஆனால் கட்டில் கால் தடுக்கிவிட்டபின்தான் "இவை அனைத்தும் பாழாய்ப்போன கனவு" என்றறிந்தேன்.

—செழியன்.

கண்ணுக்கு விருந்தாக, கருத்துக்குக் கரும்பாக
விற்பனையாகிறது

முல்லை

ஏப்ரல் இதழ்

பன்மொழிப்புலவர்
கா. அப்பாத்துரையார்,

பேராசிரியர்
அ. மு. பரமசிவானந்தனார்,

தோழர்கள்
இசையமுது, ஆ. மாதவன், அருணன்
மற்றும் பலர் எழுதுகின்றனர்.

சொல்லின்செல்வர் சம்பத்தின் அழகிய தோற்றம் அட்டையில்.

பொறுப்பாளர் : முல்லை, சென்னை-6.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு. தொலைபேசி எண் 83510.